விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 23 திங்கட்கிழமை (08.08.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 232

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இந்தியாவின் விசேட பிரதிநிதி

### பேச்சுக்களின் முறிவை அடுத்து நடவடிக்கை

(டெல்லி)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்துடன் நேரடியாக செயற்படுவதற்கு இந்தியா தனது விசேட பிரதிநிதி ஒருவரை நியமிக்கவுள்ளது.**

மிக விரைவில் மேற்கொள்ளப்படவுள்ள இந்த நியமனத்தை பெறும் இந்திய பிரதிநிதி நீண்டகால அடிப்படையில் இலங்கையிலிருந்து செயற்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படாமையை அடுத்தே இந்த முடிவை இந்தியா எடுத்துள்ளது.

இதேவேளை அமெரிக்கா, ஜப்பான், இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினைத்தீர்வுக்காக விரைவில் அமைக்கவுள்ள நாடாளுமன்ற குழுவின் (02ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. உயர்தர பரீட்சை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது. இப் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் நீலம், கறுப்பு நிறப் பேனாக்கள் மற்றும் கறுப்பு பென்சில்கள் மாத்திரதே விடையளிப்பதற்கு பயன்படுத்த முடியுமென பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கல்வி பொதுதராதர உயர்தரப் பரீட்சைகள் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

பரீட்சார்த்திகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரைமணி நேரம் முன்பாக தமது பரீட்சை நிலையங்களுக்குச் செல்ல வேண்டும்.

அத்துடன் (20ஆம் பக்கம் பார்க்க)

## சோனியா சுகவீனம் ஜனாதிபதி கவலை

(கொழும்பு)

அமெரிக்க வைத்தியசாலை ஒன்றில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பின்னர் குணமடைந்து வரும் இந்திய காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தி விரைவாக குணமடைய வாழ்த்துவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீங்கள் நோய்வாய்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை அறிந்து, சிராந்தியும் நானும் மிக கவலையடைந்தோம். எனினும் இப்போது நீங்கள் குணமடைந்து வருவதாக அறிந்து ஆறுதல் அடைந்தோம். இது விரைவானதாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

இந்திய மக்களின் நாளாந்த வாழ்வின் உங்கள் சுறுசுறுப்பும் செயற்பாட்டு பங்களிப்பும் உங்கள் கட்சிக்கும் நாட்டுக்கும் பெரும் பலமாகும்.

இந்த பாத்திரத்தை எதிர்வரும் பல ஆண்டுகளுக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## தம்பி பிரபாகரனின் பெயரில் தமிழகத்தில் உணவகம்




(சேலம்)

சேலம் மாவட்டத்தில் உள்ள ஏற்காடு கிராமத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் பெயரில் சாப்பாட்டுக்கடை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகின்றது.

தம்பி பிரபாகரன் உணவகம் என்பது இதன்பெயர். புலிகள் இயக்க சீருடையில் பிரபாகரன் கடையின் பெயர்ப்பலகையில் தோன்றுகின்றார். உறுமும் புலிச்சின்னமும் அருகில் (20ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவை விடுவிக்கக்கோரி வெலிக்கடையில் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு எதிரில் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளது.

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டு ஒன்றரை வருடகாலம் பூர்த்தியாவதனை முன்னிட்டு இந்த போராட்டம் நடத்தப்படவுள்ளது.

ஜனநாயகத் தேசிய கூட்டமைப்பின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த எதிர்ப்புப் போராட்டம் இன்று பிற்பகல் 2.00 மணியளவில் (20ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் மனிதப் புதைகுழிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் மனித எச்சங்கள் உள்ள பெரும் புதைக்குழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பகுதியில் மீள்குடியேறிய மக்கள் தமக்கான தற்காலிக வாழ்விடங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டபோது இம் மனிதப் புதைகுழிகளை கண்டுள்ளனர்.

இந்த மனித எச்சங்கள் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட ஆக்கிரமிப்பு போரின் போது படுகொலை செய்யப்பட்ட தமிழ்மக்களின் உடையதாக இருக்கலாம் என்று அப்பகுதிகளில் மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (ந-5)

## சனல் 4 தொடர்பாக விளக்கமளிக்க ஜனாதிபதி இன்று சீனா பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி தலைமையிலான தூதுக்குழுவொன்று இன்று சீனா பயணமாகவுள்ளதாகவும் இதன்போது சனல் 4 விவகாரம் குறித்து விளக்கமளிக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்திருக்கிறது.

சீனாவின் முக்கிய அரசியல் தலைவர்களை சந்தித்து இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதுடன் சீனாவிற்கும் இலங்கைக்குமிடையே சில ஒப்பந்தங்கள் கைச்சாத்திடவுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் அறிவித்துள்ளது. (ந-5)

## ஜெனிவாவில் இலங்கைக்கு பொறி வைக்கிறது அமெரிக்கா!

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடரின் போது அமெரிக்கா, இலங்கையை சிக்க வைக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது என சண்டே ரைம்ஸ் செய்தித்தாள் நேற்று தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவே நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டு அதன் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்து வருகிறது.

இந் நிலையில் நல்லிணக்க குழுவின் இறுதி அறிக்கையை எதிர்வரும் 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் விவாதிக்க விரும்புவதாக இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)




ஐரோப்பாவில் இருந்து வெளிவரும்
கணினிக்களம்
தற்போது இலங்கையில் அனைத்து புத்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது
■ கணினி வல்லுனர்களை ஒன்றிணைக்கும் ஒரே சஞ்சிகை
■ ICT மாணவர்களுக்கான விசேட இணைப்பு
■ கணினியை கற்பதற்கான இலகுவான வழிகாட்டி
■ மாதம்தோறும் பரிசில்களை அள்ளிச்செல்லுங்கள்
மேலதிக தொடர்புகளுக்கு:077-86 88 517 skype: pckalam



# ஆணைக்குழு வேண்டும்

13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டாலும் அல்லது மத்திய அரசின் கட்டுப்பாட்டிலிருந்தாலும் முஸ்லிம் சமூகத்திற்கு பாதிப்பு தான் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தெரி வித்துள்ளது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை கையாள்வதற்காக மத்திய மற்றும் மாநிலங்கள் இணைந்த ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தெரிவித்தது.

மத்திய அரசிற்கோ அல்லது மாகாண அரசுகளுக்கோ காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்குவதை எதிர்ப்பதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பொது செயலாளர் வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார். (ந-5)

# சேரி மக்களை வெளியேற்றும் அரசை விரட்டியடிக்க வேண்டும் - ரணில்

(கொழும்பு)

கொழும்பு நகரை அண்டியுள்ள சேரி மக்களை வெளியேற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆவேசத்துடன் கூறியுள்ளார்.

தலைநகர் கொழும்பில் வாழ்ந்துவரும் குறைந்த வருமானமுடைய சேரி மக்களை வெளியேற்றும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.


தமது இருப்பிடங்கள் பறிபோகக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக குறைந்த வருமானமுடைய மக்கள் என்னிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

போரின் போது பல்வேறு அர்ப்பணிப்புக்களை மேற்கொண்ட அப்பாவி பொதுமக்களின் இருப்பிடம் மற்றும் வாக்களிக்கும் உரிமைகள் பறிக்கப்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

எமக்கு எதிராக போராட்டத்தை நடத்திய குமரன் பத்மநாதனுக்கு வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது எனக் கூறிய ரணில்,


சேரிகளில் வாழும் மக்களுக்காக சர்வதேச ரீதியில் குரல் எழுப்புவதற்கு ஒருபோதும் தயங்கப் போவதில்லை.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் அப்பாவி பொதுமக்களை விரட்ட



அனுமதிக்கமுடியாது. அதற்கு பதிலாக அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# அருள் கல்வி வட்டத்தினால் இலவசக் கருத்தரங்கு



இவ்வருடம் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு ஒன்று அருள் கல்வி வட்டத்தினரால் நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்குபற்றியிருந்தனர்.

கணிதம், விஞ்ஞானம், தமிழ், வரலாறு, ஆங்கிலம் ஆகிய பாடங்கள் சார்ந்த விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

ஒவ்வொரு பாடத்திற்கும் தலா 15 ஆசிரியர்கள் தமது கருத்துரைகளை வழங்கியிருந்தனர்.

காலை 7.30 மணியளவில் ஆரம்பமான இக்கருத்தரங்கு மாலை 4 மணிவரை நடைபெற்றது.

இதில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மாணிக்கராசா, சட்டத்தரணி வே.தேவசேனாதிபதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மேலும் இக்கருத்தரங்கில் சட்டத்தரணி வே.தேவசேனாதிபதி அவர்கள் தமது சொந்தப் பணத்திலிருந்து 28 இலட்சம் ரூபாய் பெறுமதியான புத்தகங்களையும், வினாத் தாள்களையும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கினார்.

இக்கருத்தரங்கு 2-வது நாளாக தொடர்ந்து இன்றும் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-6)

# ஐ.தே.கவில் இணையுங்கள் அழைப்பு விடுகிறார் சஜித்

(அம்பாந்தோட்டை)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்ற அனைவரும் மீண்டும் இணைந்து கொள்ளவேண்டும் என கட்சியை விட்டு விலகி சென்றவர்களுக்கு வேண்டுகோள் விடுப்பதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை சூரியவெவ பகுதியில் கட்சி உறுப்பினர்களை நேற்று சந்தித்த போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பல்வேறு விடயங்கள், திருப்தியின்மை, பிரச்சினைகள், சிக்கல்கள் காரணமாக கட்சியை விட்டு சென்ற இலட்சக்கணக்கானோர் நாட்டில் இருப்பதாகவும் மீண்டும் அவர்கள் இணைந்து கொள்வதற்கு சிறிகொத்தாவின் வாயில் திறந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கட்சியின் அடித்தளத்தைக் கட்டியெழுப்புவதற்கான புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக கட்சியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாட்டிலுள்ள ஒரு பிரிவினரால் மட்டும் இனங்காணப்பட்டுள்ள தேசிய வளம், தேசிய சொத்து, பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகள் நாட்டிலுள்ள அனைவரும் சமமாக பெற்றுக் கொடுத்து சமூகத்தில் நீதியை உருவாக்கும் யுகமொன்றின் தேவை தற்போது ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-5)

# யாழ்.மாநகரசபை அமர்வுகளை பகிஷ்கரிக்க நேரிடும்

## அ.இ.முஸ்லிம் காங்கிரஸ் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை அமர்வுகளை பகிஷ்கரிக்க நேரிடும் என அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மீள்குடியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு உரிய சலுகைகள் அளிக்கப்படாவிட்டால் அமர்வுகளை பகிஷ்கரிக்க நேரிடும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் ரிசாட் பதியுதீன் தலைமையில் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் யாழ்ப்பாண மாநகரசபையில் அங்கம் வகிக்கின்றனர். கடந்த ஜூலை மாதம் 28ஆம் திகதி நடைபெற்ற அமர்வுகளின் போது வெளிநடப்புச் செய்ததாக கட்சி உறுப்பினர் ரமீஸ் தெரிவித்துள்ளார்.

450 முஸ்லிம் குடும்பங்கள் யாழ்ப்பாணத்தில் மீள் குடியேற்றப்பட்டுள்ள போதிலும் உரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த முஸ்லிம் மற்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தனித் தனியாக அடையாளம் கண்டு அவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

உரிய வசதிகள் இல்லாத காரணத்தினால் மீள் குடியேற்றப்பட்ட சில முஸ்லிம்கள் மீண்டும் புத்தளத்திற்கு சென்றுவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# மரண அறிவித்தல்

## திருமதி மகாதேவா நாகலட்சுமி

(மண்டைதீவு)



மண்டைதீவு 5-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவா நாகலட்சுமி (07-08-2011) நேற்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி திருமேனி தம்பதிகளின் பாசமிகு சிரேஷ்ட மகளும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை செல்லமுத்து தம்பதியினரின் அருமை மருமகளும், காலஞ்சென்றவர்களான நாகராஜா நாகரட்ணம், அன்னலட்சுமி, தருமதுரை, மற்றும் ஞானப் பூங்கோதை, அன்னராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் சீதாலட்சுமி, கணேசு, செல்வலிங்கம், சறோஜா ஆகியோரின் மைத்துனியும் உதயசந்திரிகா, உதயசாந்தி, உதயசூரியன், உதயசந்திரன், உஷாந்தினி, உமாபாலினி, தர்சினி, தயாளன், அமுதினி, யசோதா, டர்சினி, ஹர்சினி ஆகியோரின் அத்தையும் காலஞ்சென்ற சோமேஸ்வரன் மற்றும் ஜெகதீஸ்வரன், சாயீஸ்வரன், கெங்ககுமார், தேன்மொழி, அருள்மொழி, தெய்வகுமார் ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்:

170, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(5755)

தகவல்:
அன்னராசா, செல்வலிங்கம்.

# இனப்பிரச்சினைக்கு...

முன்னிலையில் முதலில் தமது தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன. அரசாங்கம் மற்றவர்களின் தீர்வுத் திட்டத்தை அறிவிக்க கோர முன் தமது தீர்வுத் திட்டத்தை முதலில் முன்வைக்கவேண்டும் என்று இந்த நாடுகள் கூறியுள்ளன.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படுவதற்கு விசேட பிரதிநிதியை இந்தியா நியமிப்பதற்கு முன்னதாக எதிர்வரும் சில தினங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ளனர்.

இதன்போது இந்திய அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கும் இடையில் விசேட பேச்சுவார்த்தை நடைபெறும்.

பத்து நாள் நிபந்தனைகள் விதிக்கப்படக் கூடாது எனவும், அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டுமெனவும் இந்தியா தெரிவித்துள்ளது.

அதேவேளை, இந்திய பிரதமர் மன்மோகன் சிங் இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார். பிரதமரின் இலங்கை விஜயத்திற்கு முன்னதாக நிலையான அரசியல் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

யாழ்ப்பாணம்.



# இன்று ஒரு தகவல்

## நல்ல நண்பர்களாவது எப்படி?

ஒருவர் முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டு வந்தார்.

அவர் என்னிடம், ''யார் என்னைப் பார்த்தாலும் அவர்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டு போய்விடுகிறார்கள்'' என்று கூறினார்.

அன்பாகப் பேசும் நண்பர்கள் யாரும் உங்களுக்குக் கிடையாதா? என்று கேட்டேன். அதோடு அமெரிக்க எழுத்தாளர் டேல் கார்னகி, 'நல்ல நண்பர்கள் பெறுவது எப்படி? என்பதைப் பற்றி சில வழிகள் கூறியிருக்கிறார் என்பதையும் அவரிடம் கூறினேன்.

அதைக் கேட்டதும் அவர் ஆர்வமாக, ''அதை எனக்கும் கொஞ்சம் சொல்லுங்கள்'' என்றார்.

நான் கூற ஆரம்பித்தேன்:

1.நம்மைப் பற்றியே மற்றவர்களிடத்தில் பேசிக் கொண்டிருக்காமல் அவர்களும் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். அவர்கள் பேசுகிற விடயம் சாதாரணமாக இருந்தாலும் 'ஆமாம்', 'நல்லது' என்று சொல்லி ஏற்றுக்கொள்ள வேண்டும்.

2.யாரிடமும் கூடியவரைக்கும் தேவையில்லாமல் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

3.எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அடுத்தவர்களின் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். எப்போதும் மற்றவர்களின் மனோபாவத்தை நாம் புரிந்து கொண்டால் நம்மை யாராலும் வெல்ல முடியாது.

4.ஒருவரிடம் பேச ஆரம்பிக்கும்போது இயல்பாக, அன்பாக ஆரம்பிக்க வேண்டும். உதாரணமாக, 'உங்களுக்கு இந்தச் சட்டை மிகவும் நன்றாக இருக்கிறது' என்று ஆரம்பிக்கலாம். மாறாக, 'அன்றைக்கு என்ன சேர் என்னை அம்போன்னு விட்டுட்டு போய்ட்டீங்களே' என்று ஆரம்பிக்கக் கூடாது.

5.நாம் செய்த தவறுகளைத் தயக்கமில்லாமல் ஒப்புக்கொள்ள வேண்டும். அதற்காகக் கூச்சப்பட வேண்டாம்.

6.அடுத்தவர்களுடைய கருத்துகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். 'நீங்கள் சொல்வது தவறு' என்று முகத்தில் அடித்தாற்போல பேசக்கூடாது.

7.யாரிடமும் அநாவசியமாக சவால் விடக் கூடாது.

8.நாம் எதை நினைக்கிறோமோ, அதை நம் எதிரில் இருப்பவரே அதைப் புரிந்து கொண்டு அவரே அதைச் சொல்லும்படி முயற்சி செய்ய வேண்டும்.'

9.நம் யோசனையைப் புதிய முறையில் சொல்லலாம்.

10.மிகவும் முக்கியமானது என்னவென்றால், அநாவசியமாகப் பொய் சொல்லக் கூடாது. அப்படியே சொல்ல நேர்ந்தால் அந்தப் பொய் நம்பும்படியாக இருக்க வேண்டும். தேவைப்பட்டால் பொய்யை உண்மையாகவும் மாற்ற வேண்டும்.

அது எப்படி? உதாரணமாக 'எனக்கு கார் ஓட்டத் தெரியும்' என்று நீங்கள் நண்பர்களிடம் பொய் கூறியிருந்தால், அவர் ஒரு காரைக் கொடுத்து 'ஓட்டு' என்று சொல்வதற்குமுன் நாம் கார் ஓட்டக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படிச் செய்வதன் மூலம் ஒரு பொய்யை உண்மையாக மாற்றி பிரச்சினையைத் தடுக்கலாம். இது போன்ற வெள்ளைப் பொய்கள் மட்டுமே சொல்லலாம்!

11.உங்கள் மனது எவ்வளவு அசுத்தமாக இருந்தாலும், மற்றவர்களிடம் பேசும்போது உயர்ந்த எண்ணங்கள் மட்டுமே வெளிப்படுத்துங்கள்.

12.நல்ல நண்பர்களை மிகவும் கஷ்டப்பட்டுத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இத்தனை வழி முறைகளையும் கடைப்பிடித்தால் நமக்கு நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள்.

கடைசியாக ஒரு முக்கிய செய்தி: மேலே சொன்ன எல்லாப் பண்புகளும் மற்றவர்களிடம் இருக்கிறதா என்பதைப் பார்ப்பதைவிட, அவை நம்மிடம் உள்ளனவா என்று பார்த்தல் வேண்டும்.

அப்படிச் செய்தால், முதலில் நாம் மற்றவர்களுக்கு நல்ல நண்பர்களாக மாறுவோம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நோயாளர்களை பார்வையிட வருபவர்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தருக்குமிடையில் வாய்த்தர்க்கம்

## பொலிஸ் தலையீட்டால் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு கடமையிலிருந்த உத்தியோகத்தர் ஒருவருக்கும் நோயாளரை பார்வையிட, வந்தவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து பொலிஸார் ஒருவர் பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கிய சம்பவத்தையடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையின் 30 ஆம் விடுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, சம்பவ தினத்தன்று குறித்த விடுதியில் கடமையில் ஈடுபட்டு இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் அந்த விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர் ஒருவரை பார்வையிடுவதற்காக வந்தவரை நேரம் முடிவடைந்தமையால் அங்கிருந்து வெளியேறுமாறு தெரிவித்துள்ளார்.

இதையடுத்து நோயாளரை பார்வையிட வந்தவர் பாதுகாப்பு உத்தியோகத்தருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

அவ்வேளையில் குறித்த நபரை விடுதியிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தள்ளப்பட்டார்.

இவ்வாறு இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறை பார்த்துக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டவரை தாக்கியதுடன் அச்சுறுத்தியும் உள்ளார்.

மேலும் வைத்தியசாலையில் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை அவ்விடத்திற்கு வரவழைத்து தகராறில் ஈடுபட்ட பார்வையாளரையும் சீருடையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த உத்தியோகத்தரையும் கைது செய்யுமாறும் வற்புறுத்தியுள்ளார்.

இதற்கிடையில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இத் தாக்குதல் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கும் சென்று குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலுள்ள உயரதிகாரி ஒருவரின் தலையீட்டால் குறித்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தரை பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் மன்னிப்பு கோர வைத்ததோடு எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது எனவும் கூறியுள்ளார்.

மேலும் குறித்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கைதி ஒருவருக்கு பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-6)

# 143 மில்லியன் ரூபா செலவில் பளை மத்திய கல்லூரிக்கு புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

பளை மத்திய கல்லூரியில் யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டடம் எதிர்வரும் 12 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.143 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக்கட்டடம் 100 மீற்றர் நீளம் கொண்டது.

இக்கட்டடத் திறப்பு விழாவில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 75 | 70-80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 90 | 80 |
| தக்காளி | 35 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 30 |
| கோவா | 40 | 35 | 40 |
| கரட் | 50 | 65 | 50 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 40 | 25 | 40 |
| சின்ன வெங்காயம் | 80 | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 35 | 70 |
| பாகற்காய் | 80 | 90 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | -- | 110 | -- |
| பயற்றங்காய் | 80 | 90 | 70 |
| லீக்ஸ் | 50 | 40 | 45 |
| பீற்றூட் | 30 | 35 | 30 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 90 |
| போஞ்சி | -- | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | 35 | 20 | 40 |
| கீரை – 1 பிடி | 8 | 30 | 15 |
| தேசிக்காய் | 40 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# இராசி பலன்

08.08.2011
(ஆடி 23, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
தசமி பின்னிரவு 3.23 மணிவரை
அனுசம் மாலை 6.53 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34மணிவரை

**மேடம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், வேலைச் சுமை கூடும், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் அதிகரிக்கலாம், சில அலைச்சல்கள் ஏற்படலாம்.

**இடபம்** முருகன் வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், செல்வாக்கான நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படும் நாள், ஆரோக்கியம் சீராகும், கடனில் ஒரு பகுதியை கொடுத்து தீர்த்து மகிழும் நாள், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் தோன்றும், உஷ்ணம் சம்பந்தமான நோய் ஏற்படலாம், பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள்.

**சிங்கம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், வியாபார நலனுக்காக வித்திடுவீர்கள்,மாலையில் மறக்க முடியாத சில சம்பவங்கள் நடைபெறலாம், பெண்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், கந்தன் வழிபாடு முன்னேற்றம் வழங்கும், கைமாற்றாகக் கொடுத்த பொருள் திரும்பி வரலாம்.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், தொலைபேசி மூலம் அனுகூலமான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், தொழில் முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம்** வளர்ச்சிப்பாதையை நோக்கி நகர நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர், உறவினர் பகை அகலும், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு** இடமாற்றத்தால் இனியமாற்றம் காணவேண்டிய நாள், சுபச் செலவுகள் அதிகரிக்கும், கோபத்தைக் குறைத்துக்கொள்வது நல்லது, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும்.

**மகரம்** தொழில் முன்னேற்றமுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த கருமங்கள் எளிதில் நிறைவேறும்.

**கும்பம்** தடைப்பட்ட காரியங்கள் கைகூடும், உடல் நலம் சீராகி உற்சாகம் அடைவீர்கள், செய்தொழிலில் உயர்வும் மேன்மையும் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மீனம்** புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தடைகள் விலகி தனவரவு கிடைக்கும் நாள், தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

வளவன்

# ஆங்கிலமொழி மீதுள்ள மோகத்தால் தாய்மொழியை புறக்கணிக்கக்கூடாது

## வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு



ஆங்கிலமொழி மோகத்தால் தாய் மொழியை புறக்கணிக்கக்கூடாது என வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தால் அண்மையில் நடத்தப்பட்ட தமிழ்த்தின விழாவில் தலைமைதாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,இன்றைய சூழலில் உலகளாவிய மொழியாக ஆங்கிலமொழி செல்வாக்கு பெற்றுள்ளது. ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து கற்க வேண்டியது அவசியமானதுதான். அதற்காக தாய் மொழியான தமிழ்மொழியை புறக்கணிக்கக் கூடாது.இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்றாலும் நாம் புலமைபெற வேண்டியது தமிழ்மொழியிலேயே ஆகும்.

கல்விமூலம் அடைய வேண்டிய தேர்ச்சிகளில் ஒன்றாக தொடர்பாடல் சார்ந்த திறன் பெறுதல் உள்ளது.இதன்மூலம் தாய் மொழியை திறமையாக பயன்படுத்தும் திறனை பெறுதலே எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்காகவே தமிழ்தினப்போட்டிகளும் நடத்தப்படுகின்றன.

கேட்டல், பேச்சு , எழுத்து , வாசிப்பு என்று மொழியின் அனைத்து கூறுகளுமே இங்கு போதிக்கப்படுகின்றன.மாணவர்கள் அனைவரும் பங்குபற்றக்கூடிய வகையிலேயே இப்போட்டிகள் நடத்தப்பட்டாலும் அவர்களுட் சிறந்தவர்களே! கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என அந்த மட்டங்களுக்கும் முன்னேறி செல்கின்றனர்.

தமிழ்மொழியை காப்பாற்றுவதற்காகவே மறைமலை அடிகள் தனித்தமிழ் இயக்கத்தை தோற்றுவித்தார். நமது மொழியை நாம் மதித்தாலே மற்றவர்கள் அதனை மதிப்பார்கள். மகாத்மாகாந்தி தமிழ் தெரியாதவராக இருந்தாலும் பாரதியாரின் தமிழ் பற்றையும் நாட்டுப் பற்றையும் மதித்ததனால்தான் பாரதிக்கு எழுதிய கடிதத்தில் ஓரிரு சொற்களை தமிழில் எழுதியதை இங்கு நினைவில் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ்ரீ-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாக வரத நாராயணர் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் நடைபெறும்.

இதில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் இரவு 7.30 மணிக்கு உறியடி உற்சவமும் நடைபெறும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

(ஸ்ரீ-2)

# சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை முதன்முறையாக யாழில்

## 300 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு புதிதாக உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கான உடற்தகுதிகாண் பரீட்சை முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்த உடற்தகுதி காண் பரீட்சைக்கு இலங்கையின் சகல மாவட்டங்களில் இருந்தும் 300 க்கும் மேற்பட்டவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற மேற்படி பரீட்சை நேற்று முன்தினம் துரையப்பா விளையாட்டரங்கில் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏகநாயக்க தலைமையில் ஆரம்பமானது.

இந்தப் பரீட்சை நேற்று இரண்டாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

மேற்படி பரீட்சைமூலம் இலங்கை சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு இம்முறை 290 உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் 750பேருக்கு மேல் இந்த பரீட்சைக்காக விண்ணப்பித்திருந்தனர். யாழ்.மாவட்டத்திலும் பெருமளவானோர் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்தனர்.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரை நாடளாவிய ரீதியில் உத்தியோகத்தர்களை இணைப்பதற்காக இங்கு நடத்தப்படும் முதலாவது உடற்தகுதிகாண் பரீட்சை இதுவென யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏகநாயக்க தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# இன்பசிட்டி கடற்கரையில் வான் தோண்டும் பணி இடை நிறுத்தம்

## மீனவர்கள் பெரும் அசௌகரியம்

(காரைநகர்)

இன்பசிட்டி கடற்கரையில் வான் தோண்டும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதி மீனவர்கள் கடற்றொழிலை மேற்கொள்வதற்கு பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இன்பசிட்டி கடற்றொழிலாளர் சங்கம் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனிடம் முறையிட்டுள்ளனர்.

இன்பசிட்டிக் கடற்கரையில் சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான சுமார் 15க்கும் மேற்பட்ட படகுகள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. அவற்றினைக் கரைக்கு கொண்டு வந்து சேர்ப்பதும் மீண்டும் கடலில் கொண்டு செல்வதற்கும் மிகவும் சிரமமானதாக உள்ளது.

இந்நிலையில் யாழ்.மாவட்ட செயலகத்தினால் இக்கடற்கரையில் வான்தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இப்பணி கடந்த வாரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனை மீண்டும் ஆரம்பித்து இலகுவாக கடற்றொழிலை மேற்கொள்ளுமாறு ஆவன செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், இம்முறைப்பாடுதொடர்பாக தாம் உரிய அதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஏற்கனவே இன்பசிட்டி கடற்கரை உள்ளிட்ட முனை, கடற்கோட்டை, சுப்பர் மடம்,சக்கோட்டை, பொலிகண்டி மேற்கு, பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை, கற்கோவளம், வல்வெட்டி ஆதிகோவிலடி, தொண்டைமானாறு ஆகிய பகுதிகளில் பெரிய படகுகள் தொழிலில் ஈடுபட்டு வருவதனால் இப்பகுதிக் கடற்கரைகளிலும் வான் தோண்டி கடற்றொழிலை மேம்படுத்த நீரியல்துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (ஸ்ரீ-246)

# சட்டவிரோத செயற்பாடுகள் பெருமளவில் அதிகரிப்பு

வடமராட்சி பிரதேசத்தில் அதிகாலை வேளையில் சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளதென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,வடமராட்சி பிரதேசத்தில் அதிகாலை 5 மணி தொடக்கம் 6 மணி வரையுள்ள இடைப்பட்ட நேரத்திலேயே களவாடிய மாடுகளை இறைச்சியாக்கி வேறு இடங்களுக்கு கடத்துதல் ,சட்டவிரோதமான மண் அகழ்வு ,சட்டவிரோதமாக மரம் கடத்தல் , கசிப்பு கடத்தல் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது . காலையில் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு முன்னரே இவ்வாறன சம்பவங்கள் இடம்பெறுவதாகவும் இதனால் குறித்த சந்தேக நபர்களை பொலிஸாரால் கைது செய்ய முடியாத நிலையும் ஏற்படுகின்றது.




எனவே உரிய தரப்பினர் இதனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ஸ்ரீ-4-24)

# சிறுமியின் தங்கச் சங்கிலியை திருடிய பெண்ணுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

வடமராட்சியில் சிறுமி ஒருவரின் தங்கச் சங்கிலியை திருடிய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் வல்வெட்டித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து தெரிய வருவதாவது, பருத்தித்துறையிலிருந்து நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு யாழ்நோக்கி பயணித்த 751 ஆம் இலக்க பேருந்தில் பயணம் செய்த சிறுமியின் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை விஸ்வமடுவைச் சேர்ந்த பெண்ணொருவர் தந்திரமாக அபகரித்துள்ளார்.

இது குறித்து சிறுமியின் தாயார் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உடனடியாக முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பேருந்தை வழிமறித்து பொலிஸார் குறித்த பெண்ணை சோதனையிட்டபோது அவரிடம் இருந்து தங்கச்சங்கிலி மீட்கப்பட்டது.

குறித்த பெண்ணை நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி ஏ.நடராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

அவரை எதிர்வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ஸ்ரீ-24)



தென்மராட்சி வலய முன்பள்ளிகளுக்குகிடையிலான விளையாட்டு போட்டிகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இசையும் அசைவும் நிகழ்வில் முதலாம் இடத்தை பெற்ற கைதடி பராசக்தி முன்பள்ளி சிறார்கள் மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

# தட்டெறிதலில் வெள்ளிப் பதக்கம்



(கரவெட்டி)


வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் 17 வயது ஆண்கள் பிரிவினருக்கிடையில் நடைபெற்ற தட்டெறிதல் போட்டியில் யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை மாணவனான ஸ்ரீகரன் வினோத் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (ஸ்ரீ-24)













வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட விளையாட்டு நிகழ்வு நேற்று முன்தினம் மன்னார் முருங்கன் மத்திய மகா வித்தியாலத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகளையும் உடற்பயிற்சி நிகழ்வையும் வெற்றியீட்டிய வீரருக்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ.சந்திரசிறி கேடயம் வழங்கிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# ஜெலிக்னைட் குச்சிகளுடன் மீன்பிடித்த இருவர் கடற்படையினரால் கைது

(கொழும்பு)

ஜெலிக்னைட் குச்சிகளுடன் மூதூர் கடற்பரப்பில் மீன்பிடித்தலில் ஈடுபட்டிருந்த சந்தேக நபர்கள் இருவரை கடற்படையினர் நேற்று அதிகாலை கைது செய்து மேலதிக விசாரணைகளுக்காக திருகோணமலை துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்களிடமிருந்து அதிசக்திவாய்ந்த ஜெலிக்னைட் குச்சிகள்-9, டெட்டனேட்டர்கள்-14 சார்ஜர்கள்-2 போன்றவையும் கைப்பற்றப்பட்டதாக துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த ஜெலிக்னைட் குச்சிகளை மீன்பிடிப்பதற்கு பயன்படுத்தவே தாம் அவற்றைக் கொண்டு சென்றதாக கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இவ்விருவரையும் உரிய விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக துறைமுக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)

# டெங்கு ஒழிப்பை கண்காணிக்க பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அதிகாரம்

(கொழும்பு)

நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை கண்காணித்து துரிதப்படுத்துவதற்கான அதிகாரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி வியேவர்தனவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி விஜேவர்தன பொலிஸ் திணைக்களத்தின் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் சமூக பொலிஸ் பிரிவுகளை ஒருங்கிணைத்து டெங்கு ஒழிப்புத் திட்டங்களை துரிதப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

பொதுமக்களுக்கு அபராதம் விதிக்கப்பட்ட பின்னரும் அவர்கள் நுளம்பு பெருகும் வகையில் சுற்றாடலை வைத்திருப்பது கண்டறியப்பட்டதையடுத்து டெங்கு ஒழிப்புக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்கள் உத்தரவுகளை பின்பற்றுகிறார்களா என்பதை கண்காணிப்பதற்காக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவரை நியமிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. தொற்றுநோயியல் பிரிவின் உத்தியோகபூர்வ அறிக்கையின் படி இவ்வருடம் இலங்கையில் டெங்கு நோயினால் 112 பேர் இறந்துள்ளனர். (ஸ்ரீ-2)

# உலக நிதி நெருக்கடி கனடாவை பாதிக்கும்

## நிதித்துறை அமைச்சர் எச்சரிக்கை

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நிதிப் பிரச்சினை தலைதூக்கி உள்ளது. இந்த நிதித் தட்டுப்பாடு கனடாவை பாதிக்கலாம் என நிதித்துறை அமைச்சர் ஜிம் பிளாகர்தி எச்சரித்துள்ளார்.

உலக அளவில் கனடா நிதியமைச்சர் ஜிம் பிளாகர்தி வெளியிட்ட அறிக்கையில் கூறியதாவது,

கனடா ஒரு தீவு அல்ல. நாம் அமெரிக்க பொருளாதாரத்துடன் நெருங்கிய தொடர்பு உள்ளவர்களாக இருக்கின்றோம்.

உலக பொருளாதார மீட்சி நிலை உடையக் கூடிய நிலையிலேயே உள்ளது. நமது உற்பத்தியில் மூன்றில் ஒரு பகுதி ஏற்றுமதி அளவிலேயே உள்ளது. உலக அளவில் பொருளாதார நிச்சயமற்ற நிலை நிலவுகின்றது. இதன் தாக்கம் கனடாவிலும் ஏற்படலாம் என்றார்.

கடந்த சில ஆண்டுகளாக கனடா பொருளாதார நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. நமது பட்ஜெட்டும் உலக அளவில் வலிமை மிக்கதாகவேயுள்ளது என்றும் பிளாகர்தி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடன் தர நிர்ணய முகவரான ஸ்டாண்டர்டு அண்ட் பவர் அமைப்பு அமெரிக்காவின் கடன் நிலையை 3 ஏ என்ற நிலையில் இருந்து ஏஏ பிளஸ் என மோசமான நிலையில் பட்டியலிட்டது. (ஸ்ரீ-4)

# காலி வீதியில் இருவழி போக்குவரத்து மேற்கொள்ள அனுமதி வேண்டும்

## தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

காலி வீதியில் ஒரு வழிப்பாதையாகவுள்ள பகுதியின் ஒரு புறத்தை பொது போக் குவரத்து வாகனங்கள் இருவழி போக்குவரத்துக்கும் பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடுவதற்காக போக்குவரத்து அமைச் சுடன் சந்திப்பொன்றுக்கு அனுமதி கோரியுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

காலி வீதியில் தற்போது அமுலிலுள்ள ஒரு வழி போக்குவரத்துத் திட்டம் காரணமாக பேருந்து தரிப்பிடங்களை கண்டறிவதற்கு பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாவதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

பயணியொருவர் 400 மீற்றர் தூரம் நடந்த பின் பேருந்து தரிப்பிடமொன்றை கண்டறியவேண்டும்.

எனினும் இப்பகுதியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் நடக்க வேண்டியிருப்பதாக அவர் கூறினார்.

உலகில் பொதுப் போக்குவரத்துச் சேவைக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாகவும் எனவே காலி வீதியில் தற்போது ஒருவழி போக்குவரத்து அமுல்படுத்தப்படும் பகுதியில் ஒரு புறத்தில் பொதுபோக்குவரத்து வாகனங்கள் இருவழிப் போக்குவரத்து மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)






மகளிருக்கான 15 நாள் Facial, அழகுக்கலை வகுப்புகள்

◆ வீட்டிலிருந்துவாறே தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளீரே!

இதோ உங்களுக்காக

- முக அழகுக் கலை (Facial):- (B)பஞ்சாறாஸ் Saffron, Papaya மற்றும் Gold, சொக்கலேற், தமக்குத் தாமே Facial செய்தல் உட்பட 10 வகையானவை.
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 6 முறைகளில் சேலை அணிதல்,

அழகு சாதனப் பொருட்களின் அறிமுகப்படுத்தல், செய்முறை தொடர்பான குறிப்புகள் (Notes) மற்றும் போதிய விளக்கங்களுடனான செயன்முறைப் பயிற்சிகள்.

முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (HAIR DRESSING & STYLING).

- 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 3 வித முடி வெட்டுதல்கள். தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான பயிற்சி, Perming, தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts, சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது


ஆரம்பம் - 10-08-2011 புதன் காலை 10.00 மணி

கலாலயா பயிற்சியகம் 1985-2011

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

☞ மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

# சைவசமய அமைப்புக்கள்சமூகம் நோக்கிய பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும்



"சொல்லின் செல்வர்" இரா. செல்வவடிவேல்

சிவத்தின் தொடர்புடையது அல்லது சிவம் பற்றியது சைவம் எனப்பெற்றது. சிவம் என்பது யாது? திருமூலர் 'அன்பேசிவம்' என்று குறிப்பிட்டார். எனவே அன்பை உயிர்நாடியாகக் கொண்ட நெறியே சிவநெறியாகும்.

இன்று நமது நாட்டில் சைவநெறி விபூதி, உருத்திராக்கத்தில் மறைந்து கிடக்கிறது. அடியவர்கள் வரலாற்றை விரிவாகப்பேசும் சைவசமயத்தவர்களாகிய நாம் அந்த அடியவர்கள் காட்டிய வழியை மறந்து நிற்கின்றோம்.

சண்டையைச் சாட்டு வைத்து தமிழ்மக்களாகிய நாம் நமது விழுமியங்களை அழித்து வருகிறோம். இந்து அமைப்புக்கள் ஒருங்கிணைந்து செயற்படவேண்டியது காலத்தின் தேவையாகும். சுயநலப் போக்கை விட்டு எதிர்காலச் சமூகத்திற்காக ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

சைவமக்களை ஒருங்கிணைத்தல், சமய விழுமியங்களை இளைஞர் மத்தியில் வேரூன்றச் செய்தல் மற்றும் மதங்களின் ஊடுவலைத் தடுத்தல் போன்ற பல பணிகள் நம்முன் உள்ளன.

சைவசமயம் அதன் சிறப்பினை இழக்காமல் இருப்பதற்கு உடனடியாகச் செய்யப்பட வேண்டிய பல உள்ளன. அவற்றில் சிலவற்றை நோக்குவோமாயின்,

❖ சைவசமயம் சார்ந்த அமைப்புக்கள் அனைத்தும் ஒரு பொதுவேலைத் திட்டத்தில் இணைந்து ஒருமுகமான கொள்கையுடன் செயற்பட வேண்டும். அமைப்புகளுக்கிடையே ஒற்றுமையின்மை காணப்படல் தமது பெரும் பலவீனம் என்பதை அனைவரும் உணர வேண்டும். ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

❖ பொதுமக்களுக்கு புரியும் வகையில் எளியவடிவில் சைவமய வரலாறு, சைவசமயக் கொள்கைகள், சைவம் வாழ்க்கையுடன் கொண்டுள்ள தொடர்பு, திருக்கோயில்களின் சிறப்பு, அவற்றை மக்கள் பயன்படுத்தும் முறை, ஆலய விழாக்களின் ஒழுங்கு, சைவ சித்தாந்தத்தின் தெளிவான கருத்து இவற்றைப் பற்றிய சிறுசிறு நூல்கள் வெளியிடுதல், பிரசாரம் செய்தல்.

❖ புராணங்களிலுள்ள அறிவியலுக்குப் பொருந்தாத விடயங்களை ஒதுக்கிப் புதிய வடிவில் புராணங்களை எழுதவும் பேசவும் வேண்டும்.

❖ கிராமங்களிலும் பாதிக்கப்பட்ட இடங்களிலும் முன்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு சைவப் பிள்ளைகளுக்கு இலசவமாகக் கல்வி அளிக்கப்படுவதுடன் உணவும் வழங்கப்படல் வேண்டும். இந்த அடிப்படையில் அறநெறிப் பாடசாலைகளை ஆலயங்கள் சிறப்பான முறையில் நடாத்த முடியும்.

❖ வசதியுடைய ஆலயங்கள், சமய நிறுவனங்கள், சபைகள் நூல் வெளியீடு, மருத்துவமனைகள் அமைத்தல், நூல் நிலையங்கள், நவீன முறையிலான கல்விச் சேவை வழங்குதல், யோகாசனம், தியானம் பற்றி பயிற்சி அளித்தல், உடற்பயிற்சி நிலையங்களை இருபாலாருக்கும் அமைத்தல், தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற சமூகம் நோக்கிய பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுத்த வேண்டும்.

❖ ஆங்கில அறிவும், தமிழ் அறிவும் பெற்ற சைவமயப் பிரசாரகர்களை உருவாக்க வேண்டும். வீணானவையும் வாழ்க்கைக்கு பயன்படாதனவுமான கதைகளையும், நகைச்சுவை என்ற பெயரில் விரசங்களையும் சொல்லி மக்களை மேலும் மூடர்கள் ஆக்காமல் சமயநெறியில் வாழவழி அமைக்கும் விடயங்களையும் நன்னெறிக்கு உட்படுத்தும் ஆக்கபூர்வமான புதிய விடயங்களையும் பிரசாரம் செய்யும் இளம் சமூகம் உருவாக்கப்படல் வேண்டும். இதற்கான வகுப்புக்கள், பயிற்சிப் பட்டறைகள் உருவாக்கப்படல் வேண்டும்.

❖ "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" என்பது வழக்கு. ஆனால் புதியன என்ற பெயரில் நமது பழைமையான விழுமியங்களை அழிப்பது ஏற்புடையதாகாது. பொதுமக்களுக்கு சிறிதும் பயன்படாத, ஆடம்பர சமய விழாக்கள், ஆரவாரங்களையும் ஒழித்து அவற்றுக்குச் செலவாகும் பணத்தை ஏழைச் சைவ மக்களுக்கு உதவுவதன் மூலம் அவரவர்களைச் சிவநெறியில் வாழ்விக்க வழிசெய்தல் வேண்டும். சைவ அமைப்புக்கள், ஆலயங்கள் அண்மைக் கால நிகழ்வுகளில் எங்காவது ஒரு சிறிய பாடசாலையை அமைத்திருக்கிறதா? என்று சிந்தித்துப் பாருங்கள்.

❖ ஆலயங்களில் காலை, மாலையில் வழிபாட்டின்போது திருமுறைப் பாடல்கள் பாடப்படல் வேண்டும். சிறந்த திருப்பதிகங்களை பண்ணோடு பாடி மக்கள் உள்ளங்களைச் சமயத்துறையில் திருப்பத்தக்கவாறு ஏற்பாடு செய்தல் வேண்டும். அர்ச்சனை முதலியன புரிந்தமொழியில் நடைபெறவேண்டும் என்னும் கிளர்ச்சி வலுத்து வருகிறது. அவ்வாறு நிகழுமாயின் சிறந்த ஓதுவார்கள் . இசையோடு பொருள் உணர்ந்து பாடுவாராயின் பொதுமக்கள் கோயிற்செயல்களில் ஈடுபாடு கொள்வர் என்பது திண்ணம். சைவப் பெருமக்கள் இத்துறையில் முயலவேண்டும் என்பது அடியேனின் பணிவார்ந்த வேண்டுகோள்.

❖ ஆலயங்களின் திருவிழாக்கள், கும்பாபிசேகம் போன்ற நிகழ்வுகளுக்கான செலவுகள் நியதிப்படி ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். சிறிய ஆலயங்கள் மிகவும் பாதிப்படைவதும் திருவிழாச் செலவுகள் காரணமாக திருவிழா உபயகாரர் ஒதுங்கும் நிலைமையும் காணப்படுகின்றது. இது விடயத்தில் அந்தணப் பெரு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியமானதாகும். 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்பது சைவசமயத்தின் உயர்ந்த கொள்கை என்பதை மறக்கலாகுமா?

❖ பொதுமக்களுக்கான தலயாத்திரைச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல் வேண் டும். ஆலய வழிபாடு ஆன்மாவைத் தூய்மையான சிந்தனைக்கு உட்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அவசியமும் அவசரமுமான இச்செயற்பாடுகள் உடனடியாக முன்னெடுக்கப்பட்டு நமது சைவசமயத்தை வளர்க்க அனைவரும் முன்வர வேண்டும். அன்பை அடிப்படையாகக் கொண்டு நாயன்மார் பேணி வளர்த்த சமயத்தை அதே அன்பு என்னும் அடிப்படையில் பேணி வளர்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

## மாதர் சங்கங்களூடாக 22 பேருக்கு தையல் இயந்திரங்கள் கையளிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சியை சேர்ந்த 22 பயனாளிகளுக்கு மாதர் சங்கங்களூடாக தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் யாழ். மாவட்ட முன்னாள் திட்டப் பணிப்பாளர் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க.கந்தசாமி கலந்து கொண்டு உரையாற்றுகையில் , ஐக்கிய இராச்சியத்திலுள்ள தென்மராட்சி பிரதேச மக்களின் உழைப்பில் கிடைத்த ஒரு தொகை பணத்தைக் கொண்டு இத் தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றதென்றும் இதனைப் பெற்றுக் கொள்ளும் பயனாளிகள் இதனைப் பயன்படுத்தி தமது குடும்ப வருமானத்தை மேம்படுத்துவதோடு அயலிலுள்ள யுவதிகளிற்கும் பயிற்சி வழங்கி ஊக்குவிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். (ஸ்ரீ-29)


## மேலும் 150 முன்னாள் போராளிகள் உறவினர்களிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட மேலும் 150 பேர் சமூகமயமாக்கல் அடிப்படையில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர் என புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்தார்.

குறிப்பிட்ட பாடநெறி மற்றும் தொழில் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களே இவ்வாறு சமூகமயமாக்கல் அடிப்படையில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

இறுதிக் கட்ட மனிதாபிமான நடவடிக்கையின் போது கைதான சுமார் 11 ஆயிரம் பேரில் இதுவரை சுமார் 8 ஆயிரம் பேர் சமூகமயப்படுத்தப்பட்டு விடுதலை செய்யப் பட்டுள்ளதுடன் இன்னும் 2 ஆயிரத்து 969 பேர் மாத் திரமே எஞ்சியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)







சொண்ட் நிறுவனத்தினால் கோப்பாய் பிரதேச விவசாயக் குழுக்களுக்கு மருந்து தெளிக்கும் கருவிகள் வழங்கும் நிகழ்வு சிறுப்பிட்டி பொது மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் சொண்ட் நிறுவன திட்ட உத்தியோகத்தர் க. செந்தூரன் உரையாற்றுவதையும் விவசாயப் போதனா ஆசிரியர் பாலகிருஷ்ணன் விவசாயக் குழு தலைவரிடம் மருந்து தெளிக்கும் கருவியினை கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

## கிளாலி தூய கண்மணிமாதா ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

கிளாலி தூயகண்மணிமாதா ஆலய வருடாந்த திருவிழா இவ்வருடம் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 12,13,14ஆகிய தினங்களில் மாலை 5 மணிக்கு ஆயத்த வழிபாடுகளும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.


அத்தோடு கடந்த வருடம் இத்திருவிழா கிளாலி அதேபங்கு ஆலயத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## தமிழ்மக்களின் அரசியல் உரிமைகளைப்பெற

# நடைமுறைச்சாத்தியமானதொரு பாதையை

# காட்டுவீர்களானால் அதுகுறித்து பரிசீலிக்க தயார்

## த.தே.கூட்டமைப்புக்கு அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற நாம் செல்லும் பாதையே சரியானது. அரசுடன் பேசித்தான் எமது மக்களின் சகல பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியும் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசுக்கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் தமிழ் மக்கள் சார்பாக உண்மையைப் பேசுவதற்கு தமது பக்கம் வருமாறு அழைப்பு விடுத்துள்ளதையடுத்து அதற்கு பதிலளிக்கும் வகையில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழ் மக்கள் சார்பாக உண்மையை பேச வேண்டும் என்பதற்காக தமது பக்கம் வருமாறு தமிழரசுக்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் என்னையும் அழைத்திருப்பது வேடிக்கையானதொரு கூற்றாகும். இது இருண்ட வீட்டிற்குள் இருந்து கொண்டு கறுப்பு பூனையை தேடிக் கண்டுபிடிக்க என்னையும் வருமாறு கேட்பது போல் இருக்கிறது.

தேர்தல் காலங்களில் வாக்குகளை மட்டும் அபகரிப்பதற்காக எமது மக்கள் மத்தியில் அரச எதிர்ப்புக் காட்டும் உங்களது சுயலாப வீரப்பேச்சுக்களை உண்மை என்று ஏற்பதா?... இதில் எம்மை பொறுத்தவரையில் அங்கொரு பேச்சும் இங்கொரு பேச்சும் ஒரு போதும் இருந்ததில்லை. எமது மக்கள் மத்தியில் எதை நான் பேசுகின்றேனோ அதையே அரசாங்கத்திடமும் பேசி வருகின்றேன்.

மக்களின் அன்றாட அவலங்களுக்கான தீர்வு முதற்கொண்டு அபிவிருத்திப்பணிகள் மற்றும் அரசியல் தீர்வு குறித்த விடயங்களையே நான் அரசாங்கத்துடன் இணக்கமாகப் பேசி அதில் எமது அரசியல் பலத்திற்கு ஏற்ற வகையில் முடிந்தளவு வெற்றிகளையும் ஈட்டி வந்திருக்கின்றேன்.

இதுவரை நீங்கள் தமிழ் மக்களை ஏமாற்றி பெற்று வந்த அரசியல் அதிகாரங்களை வைத்து எதை சாதித்தீர்கள்? உரிமையை பெற்று கொடுத்தீர்களா? அல்லது உரிமை கிடைக்கவில்லை என்று உங்களால் ஏமாந்த மக்களுக்கு ஒரு வேளை உணவாவது கொடுத்தீர்களா?

1977 இல் தனி நாடு பெற்றுத்தருவோம் என்று ஆணை கேட்ட நீங்கள் 18 ஆசனங்களை பெற்றீர்கள். தமிழ் மக்களை இரத்த வெள்ளத்தில் தவிக்க விட்டு நீங்கள் மட்டும் இந்தியாவிற்கு ஓடிச்சென்றீர்கள்.

தமிழர்களின் ஒற்றுமையை உலகுக்கு காட்டுமாறு கோரி 2004 இல் 22 நாடாளுமன்ற உறுப்புரிமையை பெற்றீர்கள். இதனால் எமது மக்களுக்கு நீங்கள் பெற்றுத்தந்தது என்ன?... முள்ளிவாய்க்கால் படுகுழி வரை எமது மக்கள் இழுபட்டு செல்வதற்கு துணை போனார்கள்.

ஆகவே உண்மையைபேசவும் உரிமையை பெறவும் நீங்கள்தான் சரியான திசை வழிக்கு வந்து சேரவேண்டியவர்களே அன்றி நாமல்ல. எமது மக்களின் அரசியல் உரிமைகளை பெறுவதற்கு நாம் சொல்வதை விடவும் நடைமுறைச்சாத்தியமானதொரு பாதையை நீங்கள் காட்டுவீர்களேயானால் அதை நோக்கி நாம் வருவதுபற்றிப் பரிசீலிப்பற்கு தயாராகவே இருக்கின்றோம்.

ஆனால் நீங்கள் காட்டும் திசை வழி என்பது தமிழ் மக்களை இன்னொரு அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லவே வழி வகுக்கின்றது.

எமது அரசியலுரிமை பிரச்சினையை தீராப்பிச்சினையாக இன்னும் நீடித்து செல்லும் இருண்ட திசையினையே உங்கள் வழிமுறை காட்டி நிற்கிறது.

ஆனாலும் தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினை குறித்து பொது உடன்பாட்டு தளத்தில் இருந்து அரசாங்கத்துடன் பேசுவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-6-4)

## நுகர்வோர் சட்டத்தை மீறியோரிடமிருந்து 45 மில்லியன் ரூபா அபராதம் அறவீடு

கடந்த மாதத்தில் நுகர்வோர் சட்டத்தை மீறிய 20ஆயிரம் வர்த்தகர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

காலாவதியான உணவுப் பொருட்கள் விற்பனை மற்றும் பொருட்களின் விலைகளை காட்சிப்படுத்தாமை ஆகிய குற்றச் சாட்டுக்களின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக அதிகாரசபையின் தலைவர் றூமி மர்சூக் கூறியுள்ளார்.

இவர்களிடமிருந்து சுமார் 45 மில்லியன் ரூபா அபராதம் அறிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சீமெந்து கையிருப்புகளை சந்தைக்கு விநியோகிக்காமல் பதுக்கி வைத்திருந்த வர்த்தகர்களை கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுத்ததாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஶ்ரீ-4)

## மன்னாரில் ஒரு பில்லியன் பரல்களுக்கும் அதிகமான எண்ணெய் அகழ முடியும்

### அமைச்சர் பசில் நம்பிக்கை

(கொழும்பு)

எண்ணெய் அகழ்வுப்பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டால் மேற்குலக நாடுகள் கடும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்க நேரிடும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் மேற்குலக நாடுகள் ஏற்படுத்தி வரும் குழப்பங்களைப் போன்றே இலங்கையிலும் குழப்பங்களை ஏற்படுத்த மேற்குலக நாடுகள் தயங்காது என அவர் தெரிவித்துள்ளார்.

வெற்றிகரமான முறையில் எண்ணெய் அகழ்வு மேற்கொள்ளப்பட்டால் எரிபொருளுக்காக வெளிநாடுகளிடம் கைஏந்த வேண்டிய அவசியம் கிடையாது.

மன்னார் கடற்பரப்பில் ஒரு பில்லியன் பரல்களுக்கும் அதிகமான எண்ணெய் அகழ முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்திய நிறுவனமொன்று முதல் கட்டமாக எண்ணெய் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

சீன, இந்திய மற்றும் ரஷ்ய நிறுவனங்கள் இலங்கையில் எண்ணெய் அகழ்வுப்பணிகளை மேற்கொள்ள ஆர்வம்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-4)

## சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட கப்பல் விற்பனை

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டு பின்னர் விடு தலை செய்யப்பட்டு கொழும்புதுறை முகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பல் விற்கப்பட்டதாக வர்த்தக கப்பல் பணிப்பாளர் ஷாந்த வீரகோன் தெரிவித்துள்ளார்

நீதிமன்ற உத்தரவுக்கு அமையவே கப்பலை விற்பனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பலில் இருந்து ஆறு கின்னியப் பிரஜையையும் இரண்டு மொசாம்பிக் நாட்டவர்களையும் கொண்ட கப்பல் ஊழியர் குழாமிற்கு இதுவரை எவ்வித சம்பளமும் வழங்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பல் ஒரு இலட்சத்து 40 டொலர்களுக்கு விற்கப்பட்டதாக வர்த்தக கப் பல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப்பணத்தை கொண்டு பணியாளர்களுக்கான சம்பள நிலுவையை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)



நல்லூர் ரோட்டறக்ற் கழகத்தினால் அண்மையில் கைதடி நவீல்ட் பாடசாலைக்கு ஒரு தொகுதி பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதற்கு அனுசரனை வழங்கிய சுதா மற்றும் பாடசாலை அதிபர், நல்லூர் ரோட்டறக்ற் கழகத்தலைவர் Rtr இராகுலனையும் படத்தில் காணலாம்.


## வேலணை பிரதேச சபை மீள் கேள்வி அறிவித்தல்-2011

| இல. | விபரம் | நாளொன்றுக்கான ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படாத கேள்வி படிவக்கட்டணம் | மீளளிக்கக்கூடிய கேள்விப்பணம் |
|---|---|---|---|---|
| 01 | சாட்டி சிற்றுண்டிச்சாலை | 100.00 | 500.00 | 20,000.00 |

சாட்டி சிற்றுண்டிச்சாலை 15.08.2011 ஆம் திகதி முதல் 31.12.2011 ஆம் திகதி வரை நாள் குத்தகைக்கு வழங்கப்படும்.

கேள்விப்பத்திரம் வழங்குதல் : 05.08.2011 முதல் 10.08.2011 பிற்பகல் 2.30 மணி வரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் : 12.08.2011 நண்பகல் 12.00 மணி வரை

கேள்வி திறக்கும் காலம் : 12.08.2011 பிற்பகல் 01.00 மணி

★ கேள்விப்பத்திரம் பெறுவோர் ஆள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியையும் வழங்க வேண்டும்.

★ கேள்விப்பத்திரம், கேள்வித்தொகை ஆகியவற்றுக்கு பெறுமதி சேர் வரி 12% (வற்வரி)மேலதிகமாகச் சேர்க்க வேண்டும்.

★ சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை வேலணை பிரதேசசபை செயலாளருக்கே உரியது.

★ குத்தகை தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.கெ.தவராசா,
செயலாளர்,
பிரதேசசபை, வேலணை.

பிரதேசசபை, வேலணை.
04.08.2011

(சி-3961)

# நல்லூர் ஆலய சூழலில்...

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் மாலை 3 மணி முதல் 6 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் 5 ஆம் திருவிழாவான இன்றைய நிகழ்வில் பக்தியும் முத்தியும் பற்றி இராம ஈஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். அத்தோடு அராலி கோமாதா அறநெறிப் பாடசாலை மற்றும் கோகுலம் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

* * * * *

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 5 ஆவது நாள் நிகழ்வு இன்று இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் என். சுபாகரன் வழங்கும் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது. இதில் வயலின் ஏ. ஜெயராமன், மிருதங்கம் கே.கண்ணதாசன், தபேலா ஆர்.சிவராமன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

* * * * *

சொண்ட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சைவமும் தமிழும் தழைத்தோங்கிடச் செய்திடல் வேண்டுமென்ற நோக்கில் நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மாலை 6.30 மணிக்கு ஆன்மீகச் சொற்பொழிவுகள் அறுபத்து மூன்று நாயன்மார் மண்டபத்தில் இடம்பெற்று வருகிறது.

இதில் இன்று தாடலை எனும் தலைப்பில் பொன் சுகந்தனும் நாளை செவ்வாய்க்கிழமை கந்தன் கருணை எனும் தலைப்பில் தா.சண்முகநாதனும் நாளை மறுதினம் புதன்கிழமை முருகவழிபாடு எனும் தலைப்பில் சைவப்புலவர் க. நித்தியதசீதரனும் சொற்பொழிவாற்றவுள்ளனர்.

இதில் அனைத்து தமிழ் மக்களையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்படுகின்றது. (ஸ்ரீ)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக இன்று பாரிய போராட்டம்

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் இன்றைய தினம் பாரியளவில் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

மன்னாரில் இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாகவும் இதில் 36 மீன்பிடி அமைப்புக்கள் பங்கேற்க உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


மீன்பிடி அமைச்சு மற்றும் கடற்படை அதிகாரிகளிடம் அத்துமீறல்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அகில மீன்பிடி தொழிற்சங்கப் பேரவையின் பொதுச் செயலாளர் திலேஷ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களின் பாதுகாப்பை உச்சளவில் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அண்மையில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னார், கற்பிட்டி, புத்தளம், வடமேல் மாகாண கடற்பிரதேசங்களில் அதிகளவில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக யாழ்ப்பாண மீனவர் சமாசத்தின் பேச்சாளர் எஸ்.தவரட்ணம் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஜப்பானிய தூதரக வாகனம் இராணுவ ட்ரக்குடன் மோதி விபத்து!!!

## சாரதி பலி; ஐவர் காயம்



(கொழும்பு)

கொழும்பு- கண்டி வீதியில் வரக்காபொலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் ஜப்பானிய தூதரக வாகனமொன்றின் சாரதி உயிரிழந்ததுடன் மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர்.

ஜப்பானிய தூதரகத்துக்குச் சொந்தமான வாகனமொன்று இராணுவ ட்ரக் ஒன்றுடன் மோதியதால் இரு வாகனங்களும் கால்வாயொன்றில் வீழ்ந்தன. இவ்விபத்தில் ஜப்பானிய தூதரக வாகனத்தின் சாரதி உயிரிழந்ததுடன் ஜப்பானிய பிரஜைகள் ஐவர் காயமடைந்துள்ளனர். (ஸ்ரீ-2)

# நாற்பது ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை பயன்படுத்தி அரிசி உற்பத்தி


(கொழும்பு)

40 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை பயன்படுத்தி அரிசி உற்பத்தியை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனைத் தவிர உணவுத் திணைக்களத்தின் களஞ்சியசாலைகளில் உள்ள 20 ஆயிரம் தொன் அரிசியை சந்தைக்கு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அரிசியை விற்பனை செய்வதற்கு விலை இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை என அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# நல்லூரான் திருவடிக்கு இன்று 5ஆம் திருவிழா



## நலம்பெற வரந்தா நீயே!

பொறியாறு தோற்றமாகி
பொற்றாமரைக் குழந்தையாகி
உருவினில் அழகனாகி
உன்தந்தை குருவுமாகி
கரிமுகன் தம்பியாகி
நல்லையில் கந்தசுவாமியாகி
நிற்குமெம் செந்தில்வேலே
நலம் பெற வரந்தாநீயே!

அரியாலை செ.பரத்கிருஷ்ணா

## எழில் கொஞ்சும் திருவிழா

எங்கள் தேசத்தின் எழிலார்ந்த திருவிழா
ஈழத்தமிழ்மக்கள் கொண்டாடும் பெருவிழா
சங்கத்தமிழ் தலைவனின் தமிழார்ந்த திருவிழா
சரித்திரப் பெருமை கூறும் நல்லைத்திருவிழா
பொங்கிடும் துயரறுக்கும் புனித விழா
பூலோக கைலாச நாதனின் பெருவிழா
எங்கள் பண்பாட்டை எடுத்தாழும் உயிர்விழா
எழில் நல்லைக்கந்தனின் திருவிழா

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

## ஆவணித் திருவிழா!

நல்லூர் கந்தனுக்குத் தையிலே பூசமய்யா
கலியுக வரதனுக்கு மாசிமக விரதமையா
மாம்பழத்தம்பிக்கும்பங்குனியில் உத்தரமாம்
சிங்கார வேலவனுக்குச் சித்திரைப் பொங்கலம்மா
வள்ளி மணாளனுக்கு வைகாசிப் பொங்கலம்மா
செந்தளிர் குமரனுக்கு ஆனியிலே உத்தரமாம்
அழகான தேவனுக்கு ஆடியிலே பூரமெல்லோ
நல்லைக்கந்தனுக்கு ஆவணியில் பெருவிழாவாம்.

ஆ.கந்தசாமி, கரவெட்டி

## ஆனந்தம் தர வா... வா...

நல்லூரின் நாயகனே நலம் தந்திடும் முருகேசனே
அல்லல் அறுத்து எமக்கானந்தம் தர வா வா
வல்வினை தீர்த்திடும் வள்ளி மணவாளனே- எம்
தொல்வினை தீர்த்திட புள்ளிமயில் ஏறி வா வா
ஈசனின் நெற்றிக்கண் உதித்த நெருப்பே -இப்
பாரினில் உனையன்றி வேறுதுணை உண்டோ
கார்முகில் வண்ணன் மருகா கார்த்திகேயா எமை
காத்திட வீர வேல் எடுத்து விரைவாக வா வா

திருமதி.மகேஸ்வரி நவரத்தினம்
கொக்குவில்

நல்லூர்க் கந்தா! நலம் தர வருவாய்!



கிருபா லேணர்ஸ்
Regd No Ds/589
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

தலைமைக் காரியாலயம்:- 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி :- 021 222 4353, 0777225292

கிளை :- கிளிநொச்சியில் ஐயனார் வீதி. (கச்சேரிக்கு அருகாமை) கிளிநொச்சி. தொலைபேசி :- 021 2285505, 0777238600

(சி/3962)

# மற்றொரு கோணம்



## எது உயிருக்கு மூலமோ அதுவே கடவுள்

**ஆன்மீகம் 04**

நான் எந்த மதத்தின் புனித நூல்களையும் படிக்காதவன். மதம் உண்மையில் அன்பைத்தான் போதிக்கின்றதா? படையெடுப்புகளும், சிலுவைப் போர்களும் மதத்தின் அடிப்படையில்தானே நடந்தன?

மதம் என்ற சொல்லுக்கு உள்நிலை நோக்கிய ஒரு படி என்று அர்த்தம். உள்நோக்கிப் போவதற்காகத்தான் மதங்களே தவிர போர் புரிவதற்காக அல்ல. துரதிஷ்டவசமாக 'மதம்' என்ற சொல்லே ஒரு குழுவைக் குறிக்கிற அடையாளம் என்று இப்போது புரிந்து கொள்ளப் படுகின்றது.

ஒன்றாக இருக்கிற மனிதர்கள் மத அடையாளங்களின் போரால் பிரிந்து போகிறார்கள். பக்கத்து வீட்டுக் காரர்கள்கூட மதத்தின் பேரால் பகைவர்களாகி விடுகிறார்கள். மதம் மனிதர்களைப் புனிதர்களாக மாற்றுவதற்கான வாய்ப்பு. ஆனால் மதவாதமோ, மனிதர்களை மனிதர்களாகக்கூட வாழ விடுவதில்லை. மிருகங்களாக மாற்றி விடுகிறது.

போராடுவதற்கான சூழல் ஏற்பட்டால் கூட அதைக் கடந்து போகிற பக்குவத்தைத் தான் மதம் கொடுக்க வேண்டும். ஏனென்றால் மதம் என்பது வீதிகளிலேயோ வழிபடுகின்ற இடங்களிலேயோ நிகழ்த்துகிற விடயமல்ல. உங்கள் உள்த் தன்மை சம்பந்தப் பட்டதுதான் மதம்.

மதம் உள்த் தன்மையை மேம்படுத்துவதற்கு வந்த ஒரு கருவி. மதத்தின் தலைவர்கள் என்று தங்களை சொல்லிக் கொண்டவர்கள், மதத்தை பேதம் ஏற்படுத்துவதற்கான ஒரு கருவியாக மாற்றிவிட்டார்கள். மனித சமுதாயத்தின் நன்மைக்கு எதிராக உங்கள் மதத்தில் ஏதாவது இருக்குமென்றால் அது நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டதாகத்தான் இருக்கும். மதம் பற்றி தவறாகப் புரிந்து கொண்டதால்தான் போர்கள் நடந்திருக்கிறதே தவிர மதங்களால் போர்கள் நடக்கவில்லை.

இயேசுநாதர்கூட 'கடவுளின் ராஜ்ஜியம் உங்களுக்குள் இருக்கிறது' என்று தான் சொன்னார். ஆனால் அவருடைய பெயராலேயே இன்றைக்கு ஒரு பெரிய ராஜ்ஜியம் உருவாக்கப்பட்டுள்ளது. கடவுளின் ராஜ்ஜியத்தை பல்வேறு மதங்களும் வெளியே ஏற்படுத்த முயற்சி செய்ததால் தான் போர்கள் வந்தன.

மனிதனுடைய உள்த் தன்மைதான் உயிருக்கு மூலம். எது உயிருக்கு மூலமோ அதற்குத்தான் கடவுள் என்று என்று பெயர் கொடுத்திருக்கிறோம். உள்த் தன்மையை உணர்த்துவதற்காக தரப்பட்ட கருவிதான் கடவுள் என்பது. ஆனால் அந்தக் கருவி இன்றைக்கு உலகத்தையே விழுங்குகிற பசியோடு இருக்கிறது.

நீங்கள் மத நூல்கள் எதையும் படிக்கத் தேவையில்லை. உங்கள் உள்த் தன்மை என்னவென்று பார்க்கத் தெரிந்து கொண்டால் அதுவே போதும்.

உலகில் பெரும்பாலும் சுயநல வாதிகளாக இருக்கின்றனர். நான் மட்டும் யோகா கற்றுக் கொண்டு நல்லவளாக வேண்டுமா?

நீங்கள் ஒரு தீர்மானத்தை செய்து கொண்டு அதை நியாயப்படுத்த தவிக்கிறீர்கள். அதில் யோகாவை வேறு இழுக்கிறீர்கள். மற்றவர்கள் சுயநலமாக இருப்பதென்றால் இருக்கட்டும். சுயநலமாக இருப்பது உங்களுக்கு எப்படி இருக்கிறதென்று பாருங்கள். உங்கள் நலன் என்கிற ஒரு விடயத்தை மட்டும் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதே மிகவும் ஆபத்தானது.

ஒருவர் தன் குடும்பத்தோடு ரயிலில் ஏறினார். பெட்டியைத் தன்னுடைய தலைக்குமேல் தூக்கி வைத்துக் கொண்டார். அருகில் அமர்ந்திருந்தவர்களுக்கு, அவர் தலையில் பெட்டியை வைத்திருப்பதை பார்த்தால் தங்களுக்கு கழுத்து வலிப்பதுபோல் இருந்தது. "ஏன் சிரமப்படுகிறீர்கள். கீழே வைத்து விடலாமே. மிகவும் விலைமதிப்பு உயர்ந்த பொருள் ஏதாவது இருந்தால் கீழே வைத்து அதன்மீது கூட உட்கார்ந்து கொள்ளுங்களேன்" என்றார்கள். இருக்கட்டும்! பரவாயில்லை! பரவாயில்லை" என்று பதில் சொன்னார் அந்தப் பயணி. அவர் அப்படி அமர்ந்திருப்பதற்குக் காரணம் கேட்டபோது அவர் சொன்னார், "இந்த ரயில்மீது என் பாரத்தை ஏன் போடவேண்டும். அதனால்தான் சுமக்கிறேன்." என்று உங்கள் நலனை தலையில் தூக்கி சுமப்பது உண்மையில் சிரமமானது. உலகில் பெரும்பாலும் சுயநலவாதிகளாக இருக்கிறார்கள் என்கிறீர்கள். அவர்களை ஏன் பார்க்கிறீர்கள்? எத்தனையோ பேர் பிறர் நலனில் அக்கறை உள்ளவர்களாகவும் மற்றவர்களுக்காக தங்கள் நலனை விட்டுக் கொடுப்பவர்களாகவும் இருக்கிறார்களே, அவர்களைப் பாருங்கள்.

யோகா என்பது உங்கள் உள்த் தன்மை சம்பந்தப்பட்டது. வெளி உலகில் என்ன சூழ்நிலையோ அதற்கேற்ப நீங்கள் வாழ்ந்து கொள்ளலாம். சுயநலம் என்கிற சுமையை தலையில் இருந்து இறக்கி விட்டால் நீங்கள் சுதந்திரமாக வாழ முடியும். உலக வாழ்க்கைக்கு என்று சில தகுதிகள் வேண்டும். அதை நீங்கள் செய்துகொள்ள யோகா உங்களுக்குத் தடையல்ல.

சூழ்நிலைக்கு தகுந்ததையும் தேவையானதையும் செய்யமால் இருப்பதல்ல ஆன்மீகம். அப்படி வாழ்வதற்கு முட்டாள்த்தனமென்று பெயர். யோகா கற்றுக் கொள்வதால் உங்கள் உள்த் தன்மையில் கவனம் செலுத்துகிறீர்கள். இதைப் புரிந்து கொள்ளுங்கள்.

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# புனைகதைகளிற் பேச்சுவழக்கு காலாவதியாக வேண்டியதா? 05

**க.இரகுபரன்**

"என்னடா தம்பி, சுரிக்குள்ள மாட்டிக் கொண்டாயா? ஓம், சைக்கிள் முழுக்க நல்லாச்சேறு புடிச்சிற்று. சில்லுக்குள்ள, மட்காட்டில எல்லா இடத்திலேயுமே சேறு நல்லா ஒட்டிக்கொண்டிருக்கு. அதுதான் சைக்கிள் ஸ்ராண்டில் வைச்சிற்று கம்புக் குச்சியால சேற்றைத் தட்டுறியா? மெதுவாய்த் தட்டு, உன்ர வெள்ளை வெளேரென்றிருக்கிற வேட்டியிலயும் சட்டையிலயும் சேறுபட்டா அசிங்கமாயிருக்கும் அதன் பிறகு நீ பள்ளி போகேலா. ஆமாம் உன்னைப் பார்த்தா, உன்ர உடுப்பைப் பார்த்தா வாத்தியார் போலத்தான் கிடக்கு. எங்க ஊருக்கு புதுசா வந்திருக்கியோ? அதுதான் இந்த ரோட்டில சுரி இருக்கும் எண்டு தெரியாம ராசா ஏறின குதிரை மாதிரிச் சைக்கிள விட்டுக்கொண்டு வந்திருக்கா. கொட்டியாரத்திலிருந்து தார் றோட்டில ஓடி வந்த மாதிரிச் சந்தியில இருந்து மல்லிகைத் தீவுக்குப் போயிரலாம் என்று நெனைச்சியா. சரிதான் மெயின் றோட் சந்தியில இருந்து மல்லிகைத்தீவு போறவரையுமுள்ள ஒண்ணரைக்கட்டைக்கும் இன்னமும் நல்ல றோட்டுப் போடல்ல. கோட, கொண்டல் காலத்தில இந்த களித் தரை நல்லாக் கெட்டிச்சுப் போயிரும். அந்தக் காலத்தில கல்றோட்டில ஓடுறமாதிரிச் சைக்கிள் ஓடலாம். ஆனா மழை பெஞ்சா இந்தத் தரை சக்கரை மாதிரிக் குழைஞ்சிபோயிரும். அதுவும் எங்க ஊர் மண் நல்ல பசையுள்ள மண், எங்க ஊர் அரிசியும் தான் தம்பி. அதுவும் பசையுள்ள அரிசிதான். சாப்பிட்டவனைப் பிரிய விடாது எங்கள் ஊர் அரிசி. அது மாதிரித்தான் சந்தனக் குழம்பாட்டம் இருக்கிற எங்கள் ஊர்ச்சுரியும் நல்லா ஒட்டிக் கொள்ளும். நீதான் பாரன். உன்ர சைக்கிள் றோதைக்க, சைக்கிள் கம்பிக்க, மர்க்காட்டில, றோதை அச்சல, புடிச்சிருக்க களி எப்படி ஒட்டிக் கொண்டிருக்கு? சைக்கிளை

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

உருட்டக்கூட ஏலா, ஏலாமைத்தான் அப்பிக்கொண்டிருக்கிற சுரியை கழட்டி எடுக்கக் குந்திற்றா. மெது வாத்தட்டு தம்பி, உன்ர உடுப்பில எல்லாம் சுரி பட்டிடும் பாவம்! வெள்ளை வேட்டி எல்லாம் பழுதாப் போயிரும்."

இயல்பான பேச்சுவழக்கைக் கையாண்டு யதார்த்த இலக்கியம் படைக்கப்போய் செயற்கையான மொழிநடையில் அமைந்த செயற்கையான கதையொன்றையே வ.அ.இராசரத்தினத்தால் தரமுடிந்தது என்பதை இக்கதையை முழுமையாகப் படித்தால் எளிதிலே கண்டுகொள்ளலாம்.

இனி தமிழகத்து உதாரணமொன்றையும் நோக்குவோம்.

"ரொம்பக் கிசும்புக்காரனா இருப்பாம் பொறுக்கோ இந்தப் பெய. அவுகய்யனும் அம்மையும் அப்பிராணிக் கெணக்கா இருக்கைல அவுகளுக்குப் பெறந்த இந்தக் கழுத இப்படித் தறுதலையா வந்து வாச்சிருக்கே." கோவமும் சலிப்புமா சொல்லிக்கிட்டு இருந்த மாடத்தியத் தடுத்துட்டு முத்துரத்துனம் மேல சொன்னா: "அதானடி.... அந்த வீட்டுப் பிள்ளைக பூராம் இப்படித்தான் இருக்குதுக. மித்ததுகளயாவது ஒரு வழில சேத்துரலாம். ஆனா இவ இருக்கானே... அதான் இந்த அம்மாசிப் பெய, இவன எட்முலயுஞ் சேக்க முடியாது எழவுலயுஞ் சேக்க முடியாது. ரொம்ப ரப்புக்காரன்."

"யாரு... அந்தத்த இருளாயி பேரனத்தான் சொல்கிறீக? எம்மா.... அவெ வெலாவுல வெடுச்ச பெயல்ல" பக்கத்துல ஒக்காந்து பாசிநெத்து அடுச்சுக்கிட்டுருந்த தாயம்மா சொன்னா.

அம்மாசிக்கு இருவது வயசு இருக்கும். தெருவுல பொம்பளைக சொன்னது கெணக்கா இவெ ஒரு சைசான பெயதான். ஊர்ப் பெரியவுகளுக்கு இவன வள்ளுசாப் புடிக்காது. ஆனா எளவட்டப் பெயல்களுக்கு இவம்னா உசுரு."

இக்கதைப் பகுதியில் உள்ள பேச்சுவழக்கைப் புரிந்து அதற்கூடாகக் கதையின் உரிப்பொருளைச் சென்றடைந்து கதையின் உணர்ச்சியோடு ஒன்றுவதென்பது இந்த வட்டார வழக்கிற் பயின்றவர்களுக்குக்கூட முதல் வாசிப்பிலேயே சாத்தியமாகுமா என்பது ஐயத்திற்கிடமானதே. இத்தகைய எழுத்துக்களை வாசித்துக் களைத்த நிலையிலோ என்னவோ விமர்சனப் பிதாமகர்கள் கூட முன்னைய காலத்தைய தங்கள் நிலைப்பாடு குறித்து களிவிரப்படலாயினர்.

"நாங்கள் இங்கே விட்ட தவறு, இங்கே மட்டுமல்ல பல இடங்களிலும் ஏற்பட்ட தவறு என்னவென்றால் இதனை ஒரு வாய்ப்பாடாகக் கொண்டு விட்டதுதான். வெறுமனே "நிலைமையை எடுத்துக் காட்டுவது" என்றாகிவிட்டது. இந்தத் தவறு காரணமாகவே மண்வாசனை என்ற தொடர் ஒரு குறுகிய அர்த்தத்தைப் பெற்று அந்தப் பிரதேச சொற்களைப் பயன்படுத்துவது என்றானது இல்லை. மண்வாசனை என்பது அந்தப் பிரதேசத்துப் பிரச்சனைகள் வருவது என்பதே அல்லாமல் சொற்கள் மாத்திரம் வருவதல்ல.

(தொடரும்)

# திருவிழா இசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட முறுகல் மோதலாக உருவெடுத்தது

## பலர் கைதாகி விடுதலை

(கரவெட்டி)

வடமராட்சி மாலுசந்தை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயத்தின் இளைஞர் திருவிழா வன்று இரவு இடம்பெற்ற இன்னிசை நிகழ்ச்சியில் ஏற்பட்ட இருதரப்புக்களுக்கிடையிலான தகராறு பெரிதாகி இரு கிராமங்களுக்கிடையிலான சண்டையாக மூண்டது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இவ்வாலயத்தில் கடந்த 18 ஆம் திகதி பொலிஸாரின் அனுமதி பெறாமல் இடம்பெற்ற இன்னிசை நிகழ்வின் போது இளைஞர்களுக்கும் இன்னிசை நிகழ்ச்சியை பார்வையிட வந்த தரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அது கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இரு கிராமச் சண்டையாக உருவெடுத்தது.

இதன் போது இரு தரப்பினரும் வாள் கத்தி மற்றும் கூரிய ஆயுதங்கள் சகிதம் சண்டையிடத்தயாரான போது நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைத்ததகவலையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் இரு தரப்பையும் சேர்ந்த 54 பேரை கைது செய்தனர்.

அல்வாய் கிழக்கு அத்தாய் பகுதியைச் சேர்ந்த 37 பேரும் துன்னாலை வேம்படியைச் சேர்ந்த 17 பேரும் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த சந்தேக நபர்களை 12 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது இரு தரப்பினரையும் சமாதானப்படுத்தி குறித்த சந்தேக நபர்களை ஒரு ஆட்பிணையில் செல்ல நீதிபதி உத்தரவிட்டார்.

இதற்கு முன்னர் 54 பேரில் அரசசார்பற்ற நிறுவனம் மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட 12 பேரை முற்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

இவ்விரு தரப்புகளிடமிருந்து மீட்கப்பட்ட வாள், கத்தி மற்றும் கூரிய ஆயுதங்கள் நீதிமன்றத்திற்கு பொலிஸாரினால் பாரப்படுத்தப் பட்டது.

இது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படும் என நீதிபதியால் உத்தரவிடப்பட்டது. (ஸ்ரீ-24)

# பாராளுமன்ற தெரிவுக்குழு இவ்வாரம் நிறுவப்படக்கூடிய சாத்தியம்

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் அரசாங்கத்தினால் நிறுவப் படவுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு இந்த வாரத்தில் நிறுவப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீண்டகாலமாக நீடித்து வரும் தேசிய இனப்பிரச்சினைக்கு காத்திரமான தீர்வு ஒன்றினை முன்வைக்கும் நோக்கில் அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அமைக்கத்திட்டமிட்டுள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் இறுதியாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல தரப்பினரும் இந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தங்களது கருத்துக்களை வெளியிடக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் நோக்கத்தை அறிந்து கொள்ளாது அதில் பங்கேற்கப் போவதில்லை என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அறிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக்க 2.5 பில்லியன் செலவு

## புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக சுமார் 2.5 பில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் முன்னாள் புலிப் போராளிகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

முதலாம் ஆண்டில் 1.8 பில்லியன் ரூபா செலவானதாகத் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் எந்தத் தரப்பினரும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சில தன்னார்வ தொண்டு போராளிகளின் மறுவாழ்வுத் திட்டத்திற்கு உதவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வலய மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களைப் பயன்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# அம்பாந்தோட்டை கடற்படுகையில் உள்ள பெரும்பாறையால் துறைமுக பணிகள் தாமதம்

அம்பாந்தோட்டை கடற்படுகையில் உள்ள பெரும்பாறை ஒன்றின் காரணமாக அந்த துறைமுகப் பணிகள் தாமதமடைவதாக அமைச்சர் ஒருவர் ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்தத் திட்டம் சீனாவின் பெரும் நிதி உதவியுடன் மேற்கொள்ளளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அந்தப் பாறை வெற்றிகரமாக உடைத்து அகற்றப்படுவதாக அதிகாரிகள் கூறுகின்றார்கள். ஆனால் இந்தப் பாறை அந்தத் திட்டத்துக்கு பெரும் இடையூறாக உருவெடுத்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

சீனாவின் கடனுதவி மற்றும் நிர்மாணப் பணியாளர்களின் உதவியுடன் தென்னிலங்கையை அபிவிருத்தி செய்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் மிகப்பெரிய திட்டமாக இந்த அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் திகழ்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சொந்த இடமான இந்த அம்பாந்தோட்டையில்தான் ஒரு புதிய கிரிக்கெட் அரங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு விமான நிலையமும் அமைக்கப்பட்டு வருகின்றது.

அது மாத்திரமல்லாமல் எதிர்வரும் 2018 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான நகரைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டியிலும் அம்பாந்தோட்டை நகர் கலந்து கொண்டிருக்கின்றது.

விவசாய [illegible]ங்களில் தோண்டி உருவாக்கப்பட்ட இந்தத் துறைமுகம் கடந்த வருடம் இலங்கை ஜனாதிபதியால் பெரும் விமர்சையாக அதிகாரபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் அந்தக்கடற்படுகையில் உள்ள பெரும்பாறை ஒன்றின் காரணமாக அந்த துறைமுகப் பணிகள் தாமதமடைவதாக அமைச்சர் ஒருவர் ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இந்த இடத்தில் துறைமுகத்தை அமைப்பதற்கான திட்டத்தின் சாத்தியப்பாடு குறித்த ஆய்வுகள் இங்கு பாறை இருப்பதால் அது துறைமுகத்துக்கு உகந்த பகுதி அல்ல என்று கூறியதை அரசாங்கம் புறக்கணித்து விட்டதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைக்கு ஆழமற்ற பகுதிகளில் செல்லக்கூடிய சிறிய கப்பல் மாத்திரமே இந்த துறைமுகத்துக்குள் நுழைய முடியும் என்றும் இந்தத் திட்டத்துக்கு நிதி வழங்குகின்ற சீன ஸ்டேட் வங்கி இந்தப் பாறையை உடைத்து அகற்றுவதற்கு திடீரென பெரும் பணத்தை கோருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் அந்தப் பாறையை தகர்க்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டதாகவும் ஒப்பீட்டளவில் அதற்கு குறைந்த பணமே செலவாவதாகவும் துறைமுக அதிகார சபையின் தலைவரான பிரியத் விக்கிரம தெரிவித்தார்.

எந்தப் பெரிய கப்பலும் உள்ளே வந்து பொருட்களை இறக்கி எரிபொருள் நிரப்பிச் செல்ல முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை துறைமுக நிர்மாணக் கடனுக்காக சீன வங்கிக்கு இலங்கை அரசாங்கம் அளவுக்கு அதிகமான நிரந்தர வீதத்தில் வட்டி செலுத்துவதாக பொருளாதார நிபுணரான மற்றுமொரு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# வாழும் கலைப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வாழும் கலை மையத்தினால் மூச்சுப் பயிற்சி, பிரணாயாமம், சுதர்சன கிரியா, யோகாசனம், தியானம் ஆகிய வாழும் கலைப்பயிற்சிகள் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இல 132, பலாலி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரில் நடைபெறும்.

இதில் அனைவரையும் பங்கேற்று பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)


# சவுதிஅரேபியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கைத் தம்பதியினர் பலி

சவுதி அரேபியாவின் ரியாத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த தம்பதியினர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் விபத்தில் மேலும் இரண்டு நபர்கள் காயமடைந்துள்ளனர். வாகனம் செலுத்திய சந்தர்ப்பத்தில் சாரதி உறங்கியதனால் ட்ரக் வண்டியுடன் கார் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களின் பெற்றொரே விபத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ-2)





பேராசிரியர் மருது கந்தப்புவின் மூளை நரம்பியல் சிகிச்சை நூல் வெளியீடு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இளைப்பாறிய சித்த மருத்துவத்துறைத் தலைவரும் முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளருமான பேராசிரியர் எஸ்.பவானி உரை யாற்றுவதையும் நூலின் முதற்பிரதியை பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மன்னார் மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி இராயப்பு யோசப் ஆண்டகையிடமிருந்து தொழிலதிபர் சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளை பெற்றுக் கொள்வதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அலுவலகச் செய்தியாளர்)

## மகளிர் மென்பந்து துடுப்பாட்டப் போட்டி

# உள்ளூராட்சி திணைக்கள மகளிர் அணி இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது

நல்லூர் பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் மகளிர் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் வலி. கிழக்குப் பிரதேசசபை அணியை வென்று உள்ளூராட்சித் திணைக்கள மகளிர் அணி இறுதிச் சுற்றுக்குள் நுழைந்தது.

இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற உள்ளூராட்சி அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தனர்.

அவ்வணி 2 இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அன்பரசி 35 ஓட்டங்களையும் தேவகி 17 ஓட்டங்களையும் தமது அணிக்காக பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வலி.கிழக்கு பிரதேசசபை அணியினர் 07 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களை பெற்றபோதும் ஒரு ஓட்டத்தினால் தோல்வியைத் தழுவினார். இதில் சுலக்சனா 13 ஓட்டத்தினையும் ரசிந்தா 10 ஓட்டத்தினையும் திருமாலினி 9 ஓட்டத்தினையும் பெற்றுக் கொடுத்தனர். (ஸ்ரீ-2)

# கிளிநொச்சி மகா வித்தி. அணி 171 ஓட்டங்களால் வெற்றி

அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்ட 15 வயதுக்கான கிரிக்கெட் போட்டி கடந்த 3ஆம் திகதி மன்னார் சென். சேவியர் மைதானத்தில் நடைபெற்றது.

இக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மன்னார் சென்சேவியர் கல்லூரி அணியை எதிர்த்து விளையாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 171 ஓட்டங்களால் வெற்றி பெற்று பிரிவு 3 இன் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவாகியது.

50 ஓவர் கொண்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இ. பேசிசன் 60 ஓட்டங்களைப் பெற்று தனது இரண்டாவது அரைச்சதத்தைக் கடந்தார்.

நா.தனுசன் 49 ஓட்டங்களையும் அணித்தலைவர் சி.விதுல்சன் 43 ஓட்டங்களையும் ச.பிரகாஷ் 36 ஓட்டங்களையும் இ.மதுசனன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சென்.சேவியர் கல்லூரியின் சச்சின் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் சென்சேவியர் கல்லூரி அணி 27.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுசீவன் 17 பந்துகளில் 21 ஓட்டங்களையும் கின்டஸ் 17 பந்துகளில் 21 ஓட்டங்களையும் சச்சின் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் அணியில் ர.ரஜீவன் 5 விக்கெட்டுக்களையும் நா. தனுசன் 3 விக்கெட்டுக்களையும் ஜெ.நிதர்சன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# தண்ணீர் வாளிக்குள் விழுந்து ஒன்றரை வயதுக் குழந்தை பலி

பெற்றோரின் கவனயீனத்தால் ஒன்றரை வயதுக் குழந்தையொன்று தண்ணீர் வாளிக்குள் விழுந்து உயிரிழந்த சம்பவம் கட நந்த 23 ஆம் திகதி மாலை 5மணியு ளவில் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பாக தெரிய வருவதாவது,

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தையை திடீரென காணாமல் போகவே வீட்டிலுள்ளவர்கள் குழந்தையைத் தேடியுள்ளனர்.

இதன்போது குழந்தை நிவாரணத்திற்கு வழங்கப்பட்ட வாளிக்குள் சட லமாகக் கண்டுபிடிக் கப்பட்டது. இதன் பின்னர் சடலம் கிளிநொச்சி வைத் தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# நாணயக் குற்றிகளுக்கு பெரும் தட்டுப்பாடு

இலங்கையில் நாணயக்குற்றிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாணயக்குற்றிகளைக் கொண்டு பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

10, 5, 2 மற்றும் 1 ரூபா நாணயக் குற்றிகளுக்காக அதிகளவு பணம் செலவிட நேரிட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதிக பொருட் செலவில் தயாரிக்கப்படும் இந்த நாணயக் குற்றிகளை உருக்கி ஆபரணங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகிறது.

மேலும் கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் விஹாரைகளில் நாணயக்குற்றிகள் தேங்கி கிடப்பதாகக் குறிப்பிடப்படுகிறது இவ்வாறான காரணங்களால் 25 மற்றும் 50 சத நாணயக் குற்றிகளுக்கு பாரியளவு தட்டுப்பாடு நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே நாணயக்குற்றிகளை புழக்கத்தில் விடுமாறு அரசாங்கம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஸ்ரீ-4)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2011.08 04

★ 1509-கிருஷ்ணதேவராயன் விஜய நகரப் பேரரசின் மன்னனாக முடி சூடினான். இவனது ஆட்சிக் காலமே பேரரசின் மிக உயர்ந்த நிலை ஆகக் கருதப்படுகிறது.

★ 1768-ஜேம்ஸ் குக் தனது கடற் பயணத்தை பிளைமவுத்தில் இருந்து ஆரம்பித்தான்.

★ 1848-மாத்தளை கிளர்ச்சி இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக கிளர்ச்சி செய்த வீரபுரன் அப்பு தூக்கிலிடப்பட்டான்.

★ 1863-அமெரிக்க உள்நாட்டுப் போர்: டென்னசியின் இராணுவ ஆளுநர் அண்ட்ரூ ஜோன்சன் தனது தனிப்பட்ட அடிமைகளை விடுவித்தான். இந்நாள் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் டென்னசியின் ஆபிரிக்க அமெரிக்கர்களினால் விடுமுறையாகக் கொண்டாடப்பட்டது.

★ 1908-வில்பர் ரைட் தனது முதலாவது வான்பயணத்தை பிரான்சில் லெமான்ஸ் என்ற இடத்தில் மேற்கொண்டார்.

★ 1942-இந்திய காங்கிரஸ் பம்பாயில் கூட்டிய மாநாட்டில் வெள்ளையனே வெளியேறு என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் ஜப்பான் மீது போரை அறிவித்து மன்சூரியா நகரினுள் ஊடுருவியது.

★ 1945-ஐ.நா.சாசனம் ஐக்கிய அமெரிக்காவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஐ.நாவில் இணைந்த மூன்றாவது நாடு இதுவாகும்.

★ 1947-பாகிஸ்தானின் தேசியக் கொடி அங்கீகாரம் பெற்றது.

★ 1963-இங்கிலாந்தில் இடம்பெற்ற பெரும் தொடருந்துக் கொள்ளையில் 15 பேரடங்கிய கொள்ளையர் குழு 2.6 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண் பணத்தைக் கொள்ளையடித்தது.

★ 1967-ஆசியான் அமைப்பு உருவாக்கப்பட்டது.

★ 1973-தென்கொரிய அரசியல்வாதி (பின்னர் தென்கொரிய ஜனாதிபதி) கின்டாய்- ஜுங் கடத்தப்பட்டார்.

★ 1974-வாட்டர்கேட் ஊழல்: ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் தனது பதவியைத் துறப்பதாக அறிவித்தார்.

★ 1988-மியன்மாரில் மக்களாட்சியை வலியுறுத்தி 8888 எழுச்சி நிகழ்ந்தது.

★ 1989-ஓர் இரகசிய இராணுவ விண்வெளித் திட்டத்தை முன்னெடுத்து நாசா கொலம்பியா விண்ணோடத்தை விண்ணுக்கு அனுப்பியது.

★ 1990-ஈராக் குவைத்தைக் கைப்பற்றி அதனைத் தன்னுடன் இணைத்துக் கொண்டது.

★ 1992-யாழ்ப்பாணம் அராலியில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் இலங்கை இராணுவ வட பிராந்தியத் தளபதி கொப்பேகடுவ கொல்லப்பட்டார்.

★ 2000-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்பினரின் எச்.எல்.ஹன்லி என்ற நீர்மூழ்கிக் கப்பல் 136 ஆண்டுகளுக்குப் பின்னர் கடலினுள் இருந்து வெளியே எடுக்கப்பட்டது.

★ 2006-திருகோணமலைக்கு வடக்கே வெல்வெறிப் பகுதியில் கிளைமோர் தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

★ 2007-நாசா விண்வெளி ஆய்வு மையம் என்டெவர் விண்ணோடத்தை கிறிஸ்டினா மெக்காலீப் என்ற ஆசிரியர் உட்பட ஏழு விண்வெளி வீரர்களுடன் அனைத்துலக விண்வெளி நிலையத்திற்கு கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து வெற்றிகரமாகச் செலுத்தியது.

### பிறப்புக்கள்

★ 1924-அ.ந.கந்தசாமி, ஈழத்து முற்போக்கு எழுத்தாளர் (1968)

★ 1927-எஸ்.வரலட்சுமி, நடிகை, பாடகி (இ.2009)

★ 1941-டிரோன் பெர்னாண்டோ, இலங்கை அரசியல்வாதி (இ.2008)


★ 1948-ஸ்வெட்லானா சவீத்ஸ்கயா, ரஷ்ய விண்வெளி வீராங்கனை

★ 1981-ரொஜர் ஃபெடரர், சுவிற்சர்லாந்து டென்னிஸ் வீரர்

### இறப்பு

★ 1996-நெவில் மொட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1905)

# நவீன எண் சோதிடம்




## இனிமையாகப் பழகும் இவர்கள், பிடிவாதக்காரர்கள் 13

**உடல் எண் 2 உயிர் எண் 2**

2, 11, 20, 29 போன்ற தேதிகளில் பிறந்து, இவர்களது பிறந்த தேதி, மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வந்தால் முழுமையான சந்திர ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் இவர்கள் பார்ப்பதற்கு அழகாகவும், குறைந்த உயரமுடையவராகவும் இருப்பர். எல்லோரிடமும் இனிமையாகப் பழகும் இவர்கள் பிடிவாதக்காரர்களே. சந்திரன் எவ்வாறு 15 நாட்கள் தேய்ந்து, 15 நாட்கள் வளர்ந்து வருகின்றதோ, அதைப் போன்று இவர்களது மனம் குழப்பமடைந்து பின் தெளிவடையும்.

இவர்களது திட்டங்கள் மாறிக் கொண்டே இருக்கும். பெண்களாக இருந்தால் ஆண்களால் குழப்பங்களும் ஆண்களாக இருந்தால் பெண்களால் குழப்பங்களும் உணடாகும். இளகிய மனப்பான்மை கொண்ட இவர்களைப் பிடிவாத குணத்தால் வம்புக்காரர் என்று கூறிவிடுவர். இதனால், விட்டுக்கொடுக்கப் பழகிக் கொள்ள வேண்டும். சிலர் உத்தியோகமும், சிலர் சொந்தத் தொழிலும் செய்கின்றனர். அழகான பொருட்களை வியாபாரம் செய்வதாலும், பேரம் பேசுவதாலும் பொருளீட்டுவர்.

இவர்களுடைய பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாக இயற்கையாகவே பெயர் அமைந்திருந்தால் செல்வம், செல்வாக்கு பெற்றவராகவே வாழ்ந்து கொண்டிருப்பர். அவ்வாறு பெயர் அமையாத மனிதர்கள், எப்பொழுதும் குழம்பிக் கொண்டே இருப்பர். அழகான இயற்கைக் காட்சிகள் இவர்கள் மனதைக் கவரும். தூரதேசப் பயணங்கள் செய்வதிலும் மலைப் பிரதேசங்களைச் சுற்றிப் பார்ப்பதிலும் மனம் நாட்டங் கொள்ளும். சிற்றின்ப விடயங்களில் நிதானமாக நடந்து கொள்ளுவது நல்லது. எதிலும் முன்யோசனை செய்யாது காரியங்கள் செய்து விடுவதால் தோல்வியுற்றபின் மன வேதனை அடைவர். ஆனால், பெயர் பொருத்தமானதாக அமைந்திருந்தால், வெற்றிகரமான வாழ்க்கை அமையும். இவர்கள் எதையும் பகிரங்கமாக வெளியிடாது மனதில் வைத்துக் கொண்டெ புழுங்குவர். இவர்களில் சிலர் வழக்கறிஞர்களாகவும் இஞ்ஜினியர்களாகவும் டாக்டர்களாகவும், சிறந்த பேச் சாளர்களாகவும் இருக்கின்றனர்.

ஏதாவது ஒரு பழக்கத்தைப் பழகிவிட்டால் விட முடியவில்லையென வருந்துவர். இதனால் மனக் கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ள வேண்டும். எந்தக்கெட்ட பழக்கங்களையும் ஆரம்பத்திலிருந்தே பழகாதிருத்தல் நலம். இவர்கள் கீழே குறிப்பிட்டபடி பெயரை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை சிறப்படையும்.

**தொழில்**

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்கு ஆடம்பரப்பொருள், அழகு சாதனப்பொருட்கள், சாப்பாட்டுப்பொருட்கள், விவசாயம், பச்சை நிறப்பொருட்கள் அனைத்தும் லாபத்தைக் கொடுக்கும். இவர்கள் செய்யும் வியாபார விலாசத்தை தன் தேதிக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொள்வது [illegible]யம்.

**நோய்**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு உடலுறவு சம்பந்தமான நோய், மேகவியாதி, தோல் சம்பந்தமான வியாதிகள், வாயுக் கோளாறு, உஷ்ணகட்டிகள் வரும். பெயர் நன்றாக அமைந்து விட்டால், நோய்கள் குறையும்.

**பெயர் அமைக்கும் முறை**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு முழுமையான சந்திர ஆதிக்கம் வருவதால், கேது ஆதிக்கமான 34,43 போன்ற எண்களிலும் சுக்கிர ஆதிக்கமான 15,24,33,42,60,69 போன்ற எண்

எண் கணித நிபுணர்
கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT

களிலும் பெயரை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண்-7,6

யோகமான தேதிகள்- 7,16,25; 6,15,24

யோகமான மோதிரக்கல்- வைடூரியம், முத்து

யோகமான நிறம்- பச்சை வெளிர் நீலம்

ஆகாத நிறம்- சிவப்பு

ஆகாத தேதிகள் - 9,18,27

* * *

## பெயர் எண்களின் பலன்

**34 எண் பலன்**

ஏழு எண்களில் இந்த எண் சிறப்பானவை. இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் சிறந்த அறிவாளியாகவும், பலர் போற்றும் புகழுடையவராகவும் வாழ்வார். ஆராய்ச்சி மனப்பக்குவம் கொண்ட இவர்கள் தன் கருத்துக்களை தெளிவாக விளக்குவர். பெரும் செல்வம் சேர்த்து பலருக்கு உதவுவர். ஒழுக்கம், நேர்மை,விடா முயற்சி ஆகிய இம்மூன்றும் எப்பொழுதும் இவர்களிடம் உண்டு 2,11,20,29 தேதியில் பிறந்திருந்தால் இப்பலன் நடக்கும். ஆனால் 9,18,27 போன்ற தேதியில் பிறந்தவர்களுக்கு இந்த எண் நேர்மாறான பலனைக்கொடுக்கும்.

**35 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராகக் கொண்டவர்களுக்கு எப்பொழுதும் செலவு காத்துக்கொண்டிருக்கும். மனம் அமைதி இல்லாதிருக்கும். தன்னுடைய திறமைகளையெல்லாம் தீயவழியில் பணம் சேர்க்க பயன்படுத்துவர். தன்னைச் சார்ந்தவர்களினால் நன்மை கிடைக்காது. வயிறு, முதுகு, பல் ஆகியவற்றில் வலியுண்டாகும். பெரிய வியாபாரம் செய்து கொண்டிருப்பவர், திடீரென்று பொருளை இழக்க நேரும். இதனால், வியாபார விலாசமோ, பெயரோ இந்த எண்ணில் இருந்தால் மாற்றி அமைத்துக் கொள்ளவும்.

**36 எண் பலன்**

மூன்று என்ற குருவும் 6 என்ற சுக்கிரனும் சேர்ந்து இந்த எண் வருவதால் பெண்களினால் சில இடையூறுகள் வரும். ஆனால், தனது கடுமையான உழைப்பாலும் விடாமுயற்சியாலும் செல்வந்தனாகி விடுவர். தனது பிறந்த ஊரை விட்டு வெளியேறி வாழ்க்கையில் முன்னேற நல்ல தொழிலை அமைத்துக் கொள்வர். சிலர் கடல்கடந்த பயணங்களும் செய்வதுண்டு. 9,18,27 போன்ற தேதிகளிற் பிறந்தவர்கள் இப்பெயரை அமைத்துக் கொண்டால் வாழ்க்கையில் எவ்வித சிக்கலும் இன்றி செல்வச் சீமானாய் வாழ்வர். ஆனால், 2,11,20,29; 7,16,25, போன்ற தேதிகளிற் பிறந்தவர்கள் இப் பெயரை அமைத்துக் கொண்டால் துன்பம் தொடரும்.

**37 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயரில் அமைத்துக் கொண்டால் ஆரம்பத்தில் போராடி, உயர்ந்த இடத்தை அடைவர். இவர்களது பேச்சில் வசீகரமும், நடை, உடை, பாவனைகள் கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர். தன் தகுதிக்கு மீறிய திட்டங்களை போட்டு இறுதியில் வெற்றி பெறுவர். இவர்களைப் பல உண்மையான நண்பர்கள் சூழ்ந்திருப்பர். இவர்கள் வாழ்க்கையில் முன்னேறியதற்குக் காரணம் நண்பர்கள்தான். இவர்களுக்குப் பல்வேறு வழிகளிலும் வருமானம் வந்துசேரும். இவர்கள் மனம் கலைகளிலும் கவர்ச்சியான பேச்சுக்களிலும் அழகான வீடு கட்டுவதிலும் செல்லும். என்றும் குன்றாத யோகம் உண்டு. இவர்களைக் காண்பதற்கு பலர் காத்துக் கொண்டிருப்பர். இவர்களது பிறந்ததேதி பொருத்தமானதாக இல்லாவிடின் பலன் சிறிது குறையும். தனக்குத் தேவையில்லாத விவகாரங்களில் தலையிட்டு மாட்டிக் கொண்டு திண்டாடுவர். பொதுவாக இந்த எண் பெயரில் அமைந்த நண்பர்கள் சீரும் சிறப்புமாக இருப்பதை அவதானிக்கலாம். இந்த எண் விரும்பத்தக்கதே. ஆனால் 50 வயதுக்கு மேல் இந்த எண்ணைப் பெயரில் கொண்டவர்கள் சில தோல்விகளைச் சந்திக்க நேரும். ஆனால் இந்தத் தோல்வியை மறைத்து மீண்டும் முயன்று வெற்றி பெறுவர்.



## கற்களும் நற்பலன்களும்

**வெளிர்நீலக்கல்**

மேற்குறிப்பிட்ட நீலக்கல்லின் தன்மையைக்கொண்டே இந்தக் கல்லை 4 எண்காரர்களே அணிய வேண்டும். இதிலும் 6 நூல் உள்ள கல் உள்ளது. இவை சுப்பர் பவர் கொண்டவை. விலை உயர்ந்தவை.

**கோமேதகம்**

இதை அணிந்தால் பூரண தெய்வபலம் கிடைக்கும். சாத்வீகம், ஆத்மீக வளர்ச்சி, செல்வ வளர்ச்சி, நோய் நிவர்த்தி, போன்ற நன்மைகளைச் செய்தாலும் இதை 4 எண் காரர்கள் தான் அணிய வேண்டும். விலை குறைவு.

(தொடரும்)

# இலங்கைக்கு உதவி செய்யாவிடின் சீனா இலங்கைக்குள் வந்துவிடும்-மன்மோகன்

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திப்பதற்காகவே வந்தார் வைகோ.

நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் வந்த வைகோவைப் பார்த்த மத்திய அமைச்சர் சரத் பவார்,'எப்ப நீங்க உள்ளே வரப்போறீங்கள்?' என்று அரவணைத்தார். இதே மாதிரி, மத்திய அமைச்சர்கள் பலரும் தங்கள் பாசத்தைத் தெரிவிக்க... பூரித்த மனோநிலையில் பிரதமரது அலுவலகத்துக்குள் நுழைந்தார் வைகோ!

''நான் உங்களைக் குற்றம் சாட்டிக் கடிதங்கள் கொடுப்பதற்காகவே உங்களை சந்திக்கின்றேன். நீங்களும் நான் நேரம் கேட்டதும் , உடனடியாக நேரம் ஒதுக்குகின்றீர்கள். அதற்காக எனது நன்றிகள்!" என்று வைகோ சொல்ல... " உங்கள் உயர்ந்த கொள்ளைக்காகவே நீங்கள் என்னை சந்திக்கிறீர்கள். அதை நான் மதிப்பதால், உங்களைச் சந்திக்கிறேன்!" என்று பதில் சொன்னாராம் பிரதமர்.


மூன்று கோரிக்கை மனுக்களை பிரதமரிடம் வைகோ கொடுத்தார்." முல்லை பெரியாறு அணையை உடைத்துவிட்டு புதிய அணை ஒன்றை கட்ட கேரள அரசு முயற்சித்து வருவது, தமிழக மக்களுக்கு எதிரானது.

தமிழர்களுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூடாது என்பதற்காகவே, அந்த அணை பலவீனமாக இருக்கிறது என்று கேரள அரசு பொய் சொல்கிறது!" என்று வைகோ சொன்ன போது," அந்த அணை கட்டி 100 ஆண்டுகள் ஆகிவிட்டதே. அது பலவீனம் அடைந்து இருக்காதா?" என்று பிரதமர் கேட்டாராம்.

ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் அந்த அணை வலுவாகத் தான் இருக்கும். அந்த அளவுக்கு அணையை வலுப்படுத்துவதற்கான பணிகளை உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுப்படி தமிழகம் செய்து வருகிறது. மத்திய அரசின் நீர்வள ஆணையம் நியமித்த வல்லுநர் குழுவும் முல்லை பெரியாறு' அணை வலுவாக இருப்பதாகவே சொல்கிறது. உச்ச நீதிமன்றத் தீர்ப்பை வலு இழக்கச் செய்வதற்காகவே கேரள அரசு ஒரு சட்டத்தை இயற்றி உள்ளது. சட்டத் திருத்தமும் கொண்டுவந்து உங்களுக்கு அனுப்பி உள்ளது என்று ஜெயலலிதாவின் கடிதத்தையும் வைகோ ஞாபகப்படுத்தினாராம்.

'இவை அனைத்துமே எனக்குத் தெரியும். நான் இதில் கவனம் செலுத்துகின்றேன்' என்றாராம் பிரதமர்.

ராஜீவ் கொலை வழக்கில் கைதாகி



தூக்குத்தண்டனை பெற்ற பேரறிவாளனைப் பற்றி கூறிய வைகோ,

"கொலைச் சதியைப் பற்றி பேரறிவாளனுக்கு எதுவுமே தெரியாது.

## இலங்கைக்குள் சீனா வந்துவிட்டது; தமிழக மீனவர்களை தாக்குவது அவர்களே!-வைகோ

அவர் எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்று உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வி.ஆர்.கிருஷ்ணய்யரே சொல்லி இருக்கின்றார். பேரறிவாளனைக் கடுமையாக துன்பப்படுத்தித் தான் வாக்குமூலம் வாங்கி இருக்கிறார்கள். இளம் வயதில் கைதான அவர், 20 ஆண்டுகள் சிறையில் இருந்து விட்டார்.அவரது வாழ்க்கை அழிந்து விட்டது. ஏற்கனவே நளினிக்கு மரண தண்டனையை இரத்து செய்து விட்டீர்கள். அதுபோல பேரறிவாளனுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையையும் இரத்து செய்ய வேண்டும்!" என்று வைகோ சொன்னதனைத்தையும் உற்றுக் கவனித்த பிரதமர், "உங்கள் கோரிக்கையை உள்துறை அமைச்சகத்தக்கு அனுப்பி வைக்கிறேன்!" என்றாராம்.

"நானே இதுபற்றி அமைச்சர் ப. சிதம்பரத்தைச் சந்திக்க இருக்கிறேன்..." என்று வைகோ சொல்லிவிட்டு மூன்றாவதாக ஈழப்பிரச்சினை பற்றி பேசி இருக்கிறார்.

"தொடர்ந்து உங்களுக்கு நான் எழுதிய கடிதங்கள் அனைத்திலும் 'இலங்கைப் படுகொலைக்கு பொறுப்பாளியாக பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு இந்தியா தள்ளப்படும்' என்று சொல்லி இருந்தேன். ஆனால், அதைத்தான் இந்தியா தொடர்ந்து செய்தது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல, ஜெனீவா மனித உரிமை ஆணையக் கூட்டத்தில் இலங்கையை ஆதரித்து கியூபா கொண்டுவந்த தீர்மானத்தை இந்தியா ஆதரித்துள்ளது.

உலகமே இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்ற சொல்லும் சூழலில் இந்தியா மட்டும் இப்படி நடப்பது சரியா? இந்தியா இனியாவது இலங்கைக்குத் தரும் உதவிகளை நிறுத்தி, தனது கறையைக் கழுவ வேண்டும் அனைத்து பொருளாதார நிதி உடன்படிக்கைகளையும் இரத்து செய்ய வேண்டும்..."என்று வைகோ சொன்ன போது,

''இலங்கைக்கு நாம் உதவி செய்யவில்லை என்றால், சீனா, இலங்கைக்குள் வந்துவிடும்!" என்றாராம் பிரதமர்.

" சீனா வந்துவிட்டது. இலங்கைக் கடற்படை படகுகளில் வந்து தமிழக மீனவர்களைத் தாக்குவது சீனக் கப்பற்படை வீரர்கள் தான்.

இந்தியா எத்தகைய உதவிகளைச் செய்தாலும் இலங்கை நாடு சீனாவுக்குத்தான் நண்பனாக இருக்கும். சீனாவையும் பாகிஸ்தானையும்தான் நட்பு நாடாக அவர்கள் நினைப்பார்கள். நம்மைச் சேர்க்கமாட்டார்கள்!" என்று வைகோ சொன்னபோது, கவனமாகக் கேட்டார் பிரதமர்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்தை சந்தித்து பேரறிவாளன் விடுதலை குறித்து வைகோ பேசினாராம்.

ஈழத்தமிழர் படுகொலை குறித்து தமிழில் தான் வெளியிட்டுள்ள சி.டிகளின் ஆங்கிலப் பிரதியை டில்லி பத்திரிகையாளர்களுக்குப் பிரத்தியேகமாகப் போட்டுக் காண்பித்தார் வைகோ.

அந்த உருக்கமான சி.டியைப் பார்த்த பல பத்திரிகையபளர்கள்,"

ஜூனியர் விகடன்

கொழும்பில் இவ்வளவு கொடுமைகள் நடந்துள்ளது எங்களுக்கே தெரியாது!" என்று பகிரங்கமாகப் பேசிக் கொண்டனர். வைகோவை சந்தித்த டில்லி வாழ் தமிழ் மாணவர்கள்,' நீங்கள் தான் தமிழீழத்தின் இந்திய அம்பாசிடர்!' என்று சொன்னதை நெகிழ்வுடன் கேட்டார் வைகோ!

சரோஜ் கண்பத்

# கிழக்கில் சட்டவிரோத ஆயுதங்களை தேடும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சட்டவிரோத ஆயுதங்களை தேடும் நடவடிக்கைகள் இன்றைய தினம் முதல் ஆரம்பமாகும் என மாகாண கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொது மன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி சிலர் ஆயுதங்களை ஒப்படைத்துள்ளதாகவும் ஆயுதங்களை ஒப்படைத்தவர்கள் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியை சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கப்பம் கோரல் நடவடிக்கைகளுக்காக இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை மாகாணம் முழுவதையும் உள்ளக்கக்கூடிய வகையில் புலனாய்வுப் பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களைப் பயன்படுத்தும் நபர்கள் கைது செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

### உயிர் பாதுகாப்பு அங்கிகளின்றி

# கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

(கொழும்பு)

உயிர் பாதுகாப்பு அங்கிகள் உள்ளிட்ட பொருட்கள் இன்றி மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர்பில்அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

இந்த விடயம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டதாக கடற்கரை பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய தெரிவித்துள்ளார்.

உயிர் பாதுகாப்பு அங்கிகள் உள்ளிட்ட பொருட்கள் இன்றி கடலுக்குச் செல்லும் மீனவர்கள் அடையாளம் காணப்பட்டால் அவர்களை எச்சரித்து விடுக்கும் நடைமுறையே தற்போது காணப்படுகிறது.

மீன்பிடி நடவடிக்கைகளுக்காக கடலுக்குச் செல்லும் படகுகளில் உயிர் பாதுகாப்பு அங்கிகள், இயந்திர உதிரிப்பாகங்கள் ,போதுமானளவு உணவு, குடிநீர் உள்ளிட்டவை இருக்க வேண்டும் எனவும் இயந்திரம் உரியதரத்துடன் காணப்படவேண்டியது அவசியம் எனவும் கடற்கரை பாதுகாப்பு திணைக்களம் சுட்டிக் காட்டியுள் ளது.

(ஸ்ரீ-2)

## லண்டனில் கலவரம்

# பொலிஸ் வாகனங்கள் மீது பெற்றோல் குண்டுகள் வீச்சு



(லண்டன்)

லண்டனின் வடபகுதியான டொடென்ஹாமில் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து நேற்று முன்தினமிரவு அப்பகுதியில் பாரிய வன்முறை மூண்டது.

பல கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் டொடென்ஹாம் நகர வீதிகளில் காவல் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீதும் பொலிஸ் வாகனங்கள் மீதும் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

காயமடைந்த 8 பொலிஸார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அப்பகுதியில் இயல்புநிலையை ஏற்படுத்தும் முயற்சிகளில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். கடந்த வியாழனன்று மோதலொன்றின் போது பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 29 வயதான மார்க் டக்கன் எனும் இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து இவ்வன்முறைகள் வெடித்தன.

பொலிஸாரின் இரு ரோந்துக் கார்கள் இரட்டைத் தட்டு பஸ் உட்பட்ட பல வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

டொடென்ஹாம் பிராந்தியம் இங்கிலாந்தில் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றாகவுள்ளது. இது லண்டனில் அதிக கறுப்பின மக்கள் வசிக்கும் பகுதிகளில் ஒன்றாகும். அங்குள்ள சிறார்களில் அரைப்பங்கினர் வறுமையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஸ்ரீ-4)

# விலைவாசி உயர்வை எதிர்த்து இஸ்ரேலில் மக்கள் போராட்டம்



இஸ்ரேல் நாட்டில் விலை வாசி அதிகரித்துள்ளது. இதனால் மக்களின் வாழ்வாதாரம் குறைந்து விட்டது. எனவே அன்றாட வாழ்க்கையை நடத்த பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர். ஆகவே விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வலியுறுத்தி அரசுக்கு எதிராக ஆங்காங்கே போராட்டம் நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் போராட்டம் தீவிரம் அடைந்தது. தலைநகர் டெல்அவிவ் ஜெருசலம் மற்றும் பல நகரங்களில் நேற்று முன்தினம் பொது மக்கள் திரண்டனர். வீதிகளில் இறங்கி பேரணி நடத்தினார்கள். டெல் அவிவ் நகரில் 2 இலட்சம் பேரும் ஜெருசலேமில் 30 ஆயிரம் பேரும் பங்கேற்றனர். இவை தவிர மற்ற நகரங்களிலும் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

நாடு முழுவதிலும் மொத்தம் 3 இலட்சம் பேர் திரண்டு போராடியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையே விலைவாசியை குறைக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உறுதி அளித்துள்ளார். இதே நிலையில் போராட்டம் மற்றும் கலவரம் ஏற்படும் சூழ்நிலை உருவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஸ்ரீ-4)




# சீனாவை புயல் தாக்கும் அபாயம்; 2 இலட்சம் பேர் வெளியேற்றம்

(பீஜிங்)

இந்த ஆண்டு இதுவரை 8 புயல்கள் சீனாவை தாக்கியுள்ளன. இந்த நிலையில் மியூபா என்ற 9 ஆவது புயல் உருவாகி மிரட்டி வருகிறது. இது ஷிஜியாங் மாகாணத்தை தாக்கும் அபாயம் உள்ளது. அது கரையை கடக்கும் போது பலத்த காற்றுடன் மழை பெய்யும். இதனால் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்படும் என அஞ்சப்படுகிறது.

இதனால் ஷிஜியாங் மாகாணத்தில் தாழ்வான இடங்களில் தங்கி இருக்கும் 2 இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக ஷிஜியாங் மாகாணத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் குழுத் தலைவர் ஷவோ ஹோங் சூ தெரிவித்துள்ளார்.

மேலும் ஷிஜியாங் மாகாணத்தில் கடற்கரை சுற்றுலா நகரங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை. இதனால் படகுகள் மீன்பிடித்துறை முகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

முன்எச்சரிக்கை நடவடிக்கையாக குயின் ஷான் அணுமின் நிலையம் மூடப்பட்டுள்ளது. இந்த புயல் காரணமாக சீனாவின் 10 மாகாணங்களில் பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-4)

# ஓசாமா பின்லேடனைக் கொன்ற இருபது அமெரிக்க வீரர்கள் பலி

## ஒபாமா அதிர்ச்சி

ஆப்கானில் அல்கொய்தா, தலிபான் தீவிரவாதிகளை அழித்து மீண்டும் அமைதியை கொண்டுவர நேட்டோ படைகள் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை வார்டாக் பகுதியில் உள்ள வீட்டில் தீவிரவாதிகள் கூடியிருப்பதாக கூட்டுப் படையினருக்குத் தகவல் கிடைத்தது. உடனடியாக அந்த இடத்துக்கு ஹெலிகொப்டரில் விரைந்து சந்தேகத்துக்கு இடமான வீட்டை நோட்டமிட்டனர்.

அப்போது தீவிரவாதிகள் திடீரென ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தினர். இதில் ஹெலிகொப்டர் நொறுங்கியது. இதில் அமெரிக்க வீரர்கள் 31 பேர், ஆப்கான் கொமாண்டோக்கள் 7 பேர் பலியாகினர்.

இவர்களில் 20 பேர் பாகிஸ்தானில் பதுங்கியிருந்த அல்கொய்தா தீவிரவாதி ஒசாமா பின்லேடனை சுட்டுக் கொன்ற குழுவில் இருந்தவர்கள். இத்தகவல் அறிந்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அதிர்ச்சி அடைந்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையில் கூறியுள்ளதாவது, சர்வதேச அளவில் தீவிரவாதத்தை ஒழிக்க அமெரிக்க வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் செய்து வரும் அதீத தியாகத்தையே இந்த சம்பவம் மீண்டும் நமக்கு நினைவு படுத்துகின்றது.

தாக்குதலில் பலியான அமெரிக்க, ஆப்கான் வீரர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார்.

இதேபோல் ஆப்கான் ஜனாதிபதி ஹமித் கர்சாயும் இரங்கல் தெரிவித்துள்ளார். ஆப்கானில் கடந்த 2001 முதல் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் அமெரிக்க கூட்டுப் படைகள் ஈடுபட்டுள்ளன.

ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் நடந்த தாக்குதலில் 38 பேர் ஒரே நேரத்தில் பலியானது இதுவே முதல்முறையாகும். (ஸ்ரீ-4)

# சவுதி இளவரசரின் அரண்மனைக்குள் புகுந்த நபர் சுட்டுக்கொலை


(ரியாத்)

சவுதி அரேபியாவின் இளவரசர் நயீப்பின் அப்துல் அசிஷ். இவர் உள்துறை மந்திரியாகவும் பதவி வகித்து வருகிறார். ஜெட்டாவில் உள்ள அரண்மனையில் இவர் குடும்பத்துடன் தங்கியுள்ளார்.

இந்த நிலையில் அவரது அரண்மனைக்குள் துப்பாக்கியுடன் மர்ம நபர்கள் புகுந்தனர். அவர்களை பாதுகாப்பு படையினர் சுற்றி வளைத்தனர். உடனே அவர்கள் பாதுகாப்பு படையினர் மீது துப்பாக்கியால் சுட்டனர். பதிலுக்கு அவர்களும் சுட்டனர்.

இதையொட்டி நடந்த துப்பாக்கி சண்டையில் ஒருவன் கொல்லப்பட்டான். அவனுடன் வந்த மற்றொருவன் கைது செய்யப்பட்டான். அவர்கள் தீவிரவாதிகளாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகப்படுகின்றனர். எனவே பிடிபட்டவனிடம் தீவிர விசாரணை நடந்து வருகிறது.

(ஸ்ரீ-4)



லிபிய ஜனாதிபதி கடாபி மீதான நேட்டோ படைகளின் தாக்குதல் தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இத்தாக்குதலில் ஜின்டான் பகுதியில் உள்ள இந்தப் பாடசாலை இடிந்து தரைமட்டமாகியுள்ளதைப் படத்தில் காணலாம்.

# விண்வெளி செல்லும் கனவில் பிரித்தானிய இளவரசர்



பிரித்தானியாவின் றோயல் குடும்பத்தின் இளைய வாரிசான ஹரி மிகப்பெரிய பாய்ச்சல் ஒன்றுக்கான மிகச் சிறிய அடி ஒன்றினை எடுத்து வைத்துள்ளார்.

துணிச்சல் மிகுந்தவரான 26 வயதான இளவரசர் ஹரி தைரியமாக நாசாவில் விண்வெளிக்குச் செல்வதற்கான பயிற்சிக்குச் செல்லத் திட்டமிட்டுவருகின்றார். அடிப்படையில் இராணுவ விமானப்படையின் விமானியாக ஹரி விண்வெளிக்குச் செல்லும் முதலாவது றோயல் குடும்ப உறுப்பினர் என்ற பெருமையையும் பெறவுள்ளார்.

அடுத்த ஆண்டு அவர் ஆப்கானிஸ்தானிலிருந்து நாடு திரும்பிய பின் அமெரிக்க விண்வெளித் திட்டத்தின் கௌரவ உறுப்பினர் அந்தஸ்தை பெற நம்பிக்கை கொண்டுள்ளார்.

ஹரி குறைந்தது ஆயிரம் மணித்தியாலங்கள் நாசாவின் நவீன ரக இன்ஜின் பொருத்தப்பட்ட ஜெட் விமானத்தில் பறக்க வேண்டும்.

ஹரி ஏற்கனவே நிலம் மற்றும் கடல் கண்காணிப்பு மற்றும் சமுத்திரவியல் தொடர்பான தனது படிப்பை நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## சமாதான நீதிவான்களாக உள்ள 30 ஆயிரம் பேர் சாதாரண தரம்கூட சித்தியடையாதவர்களே

(கொழும்பு)

நாட்டில் கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் சித்தியடையாத 30 ஆயிரம் பேர் சமாதான நீதிவான்களாக பதவி வகித்து வருகின்றனர்.

சில சமாதான நீதிவான்கள் தரம் 6 முதல் 8 வரையிலான பாடசாலை கல்வியை மட்டுமே பூர்த்தி செய்துள்ளனர் என சமாதான நீதிவான்களுக்கான மனித உரிமை அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

சாதாரண தரப் பரீட்சையில் குறைந்த பட்சம் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்களே சமாதான நீதிவான்களாக நியமிக்க முடியும் என்பது நியதியாகும்.

எனினும் அரசியல் செல்வாக்கு மற்றும் ஏனைய காரணிகளினால் தகுதி குறைந்தவர்கள் இவ்வாறு சமாதான நீதிவான்களாக நியமிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இவ்வாறு உரிய கல்வித் தகுதியற்ற 30 ஆயிரம் பேர் சமாதான நீதிவான்களாக பதவி வகிக்கின்றனர். கடவுச்சீட்டு திணைக்களம், மோட்டார் வாகன பதிவுத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்கள அலுவலகங்களுக்கு அருகாமையில் சமாதான நீதிவான் உத்தியோகபூர்வ முத்திரையுடன் சில சமாதான நீதிவான்கள் கையொப்பமிடுவதற்காக சிறியளவு பணம் அறவீடு செய்யப்படுகின்றது.

சமாதான நீதிவான் பதவி என்பது ஓர் கௌரவமான பதவி எனவும் அதனைக் கொண்டு சம்பாதிப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் சுட்டிக்காட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியிடமும் நீதி அமைச்சரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக குறித்த மனித உரிமை அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (ஸ்ரீ-4)


## கட்டுநாயக்க மோதல் சம்பவம் குறித்த விசாரணை அறிக்கை ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதம நீதிவான் மஹானாம திலகரட்னவினால் குறித்த அறிக்கை நேற்று முன்தினம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய பகுதியில் பாதுகாப்பு தரப்பினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு முன்னாள் பிரதம நீதிவான் மஹானாம திலகரட்னவை ஜனாதிபதி நியமித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



நவாலியூர் அருள் மிகு கனை யோடை கண்ணகை அம்மன் தேவஸ்தான ஆடிப் பூரத்திரு விழா வின் போது...

## அரசாங்கம் தயாரித்த அறிக்கை வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

மனிதாபிமான நடவடிக்கை தொடர்பிலான தகவல்கள் உள்ளடக்கிய அரசாங்கம் தயாரித்த அறிக்கை இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கும் உயர்ஸ்தானிகராலயங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் தூதரகங்கள் உயர்ஸ்தானிகராலயங்களுக்கும் அந்த அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் மக்கள் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சரத் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

சனல்-4 ஒளிபரப்பிய காணொளி போலியானது என்பதை உறுதிப்படுத்துவதற்கான காணொளியொன்றும் அரசாங்கத்தின் அறிக்கையுடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த அறிக்கை வெளியிட்ட போது பாதுகாப்பு செயலாளரும் வெளிவிவகார அமைச்சரும் ஆற்றிய உரைகளின் பிரதிநிதிகளும் தூதரகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் சனல்-4 அலைவரிசையின் காணொளிக்கு நேரடியாக பதிலளிக்கும் வகையில் இவை வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தொடர்பாடல் பிரிவு பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் அறிக்கை மற்றும் காணொளியை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தை தெளிவுபடுத்துமாறும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் தூதுவர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

அடுத்து வரும் சில மனிதாபிமான நடவடிக்கை தொடர்பிலான அறிக்கை மற்றும் காணொளி குறித்து சர்வதேச நாடுகளின் பதில்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

## சனல் -4 ஆவணப்படம் மறுஒளிபரப்பு செய்யப்பட்டமைக்கு எதிர்ப்பு

### ஆஸி. வாழ் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டம்

அவுஸ்திரேலிய ஒளிபரப்புச் சேவைக்கு ஊடகத்திற்கு எதிராக அவுஸ்திரேலியா வாழ் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

பிரித்தானியாவின் சனல்-4 ஊடகத்தினால் ஒளிபரப்புச் செய்யப்பட்ட ஆவணப்படத்தை மறுஒளிபரப்புச் செய்தமைக்கு எதிர்ப்பு வெளியிட்டு இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலி ஆதரவாளர்களின் கருத்துக்களுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கப்படக்கூடாது என ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் பக்கத்தில் உள்ள நியாயங்களையும் இவ்வூடகம் செவிமடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கைக்கு இதுவரையில் குறித்த தொலைக்காட்சி சேவை பதிலளிக்கவில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். சனல்-4 ஊடகத்தினால் ஒளிபரப்புச் செய்யப்பட்ட கொலைக்களம் ஆவணப்படத்தை அவுஸ்திரேலிய ஒளிபரப்புச் சேவை அண்மையில் மறு ஒளிபரப்புச் செய்திருந்தது. (ஸ்ரீ-2)

## அ'புரம், பொலனறுவை மாவட்டங்களில் ஒரு மில்லியன் சிறுநீரக நோயாளிகள்

அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகளவான சிறுநீரக நோயாளிகள் காணப் படுவதாக புதிய ஆய்வுத் தகவல்கள் தெரி விக்கின்றன.

அதிகமாக நோயாளிகள் மோசமான சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அநுராதபுரம், பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் அதிகளவானோர் சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர் டாக்டர் பராக்கிரம ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

நிலக்கீழ் நீரில் இரசாயனப் பொருட்கள் காணப்படுகின்றமையே இந்த சிறுநீரக நோய்களுக்கான கரணமாகும். (ஸ்ரீ-2)

## தமிழ் நாட்டிற்கான பயணம் குறித்து இலங்கையர்களுக்கு எச்சரிக்கை

இலங்கையர்கள் தமிழ் நாட்டுக்கான பயணங்களை மேற்கொள்ளும் போது அவதானத்துடன் செயற்பட வேண்டும் என சென்னையில் உள்ள இலங்கை பிரதி உயர்ஸ்தானிகராலயம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சில குழுக்களின் செயற்பாடுகள் காரணமாக தமிழ்நாட்டுக்கான பயணங்கள் மேற்கொள்ளும் இலங்கையர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற சந்தேகம் நிலவுவதாக சென்னையிலுள்ள இலங்கைக்கான பிரதி உயர்ஸ்தானிகர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் சென்னையில் இலங்கை பிரஜைகள் மூவர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)


## மரண அறிவித்தல்

### சுப்பையா மாரியாயி



இந்தியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா மாரியாயி அவர்கள் நேற்று (07.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும், கோபால், ராஜீ, ராமையா, ஆறுமுகம், சங்கர், பொன்னம்பலம், லட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தங்கவேல் மற்றும் சண்முகம் (சண்முகம் உணவகம்), கணேசன், சரோஜா, விஜயலட்சுமி, பானுமதி ஆகி யோரின் அன்புத்தாயாரும், சிவகுரு, மணியம் (மணியம் கபே), ராணி, ரமேஸ், சிவமணி, ஜெயம் (ஜெயம் கபே), மரியதாஸ்,ஜோன் பீற்றர், ராகவன், சிறி (நிரோஜன் உணவகம்), செல்வி, கலா, சாந்தி ஆகி யோரின் அன்பு மாமியாரும், மஞ்சுளா, முரளிதரன் (அவுஸ்திரேலியா), சுதா, ரஜனிகாந், வத்சலா, நளினிகாந், தீபன், கபிலேஸ், சோபிகா, ரூபன், பிரியதர்ஷன், திவாகரன், சயந்தன், பியூலா, யெகூ, எஸ்தர், கீர்த்திபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சொப்னா, ரிஷாந், சரண்ஜா, சாபிதா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.08.2011 திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

41, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
எஸ்.சண்முகம்.
(மகன்)

(5752)

# தெற்கிலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வினையே வழங்க வேண்டும்

## அமைச்சர் ரட்ணசிறி தெரிவிப்பு



தெற்கிலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வினையே தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்க வேண்டும் என நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நேற்று முந்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் இணைந்து செயற்பட அரசாங்கம் தயாராகவுள்ளதாகவும் பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்கானதீர்வினைக் காணவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

24 மணித்தியாலங்களில் உடனடித் தீர்வொன்றை வழங்கமுடியாது என தெரிவித்த சிரேஷ்ட அமைச்சர் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் மக்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வொன்றையே முன்வைக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

தேசிய பிரச்சினை குழப்பத்திற்கு மத்தியில் தீர்வினை முன்வைக்க முடி யாது எனவும் அத்தகைய தீர்வொன்று முன்வைக்கப்பட்டால் அது சர்வதேச மட்டத்தில் பிரச்சினைகளை வலுப்பெறச் செய்வதற்கான காரணியாக அமையலாம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரச்சினைகள் மேலும் வலுப்பெறலாம் என்பதால் இரண்டு நாட்களிலோ அல்லது இரண்டு வாரங்களிலோ தேசிய பிரச்சினைக்கான தீர்வினை முன்வைக்க முடியாது என தெரிவித்த சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு சற்று பொறுமையுடன் செயற்படவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (ஸ்ரீ-2)

## இலங்கை-உக்ரைன் நேரடி விமானசேவை

கொழும்பிற்கும் உக்ரைன் தலைநகர் கிவ்விற்கும் இடையிலான நேரடி விமான சேவை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக உக்ரைன் வர்த்தக மற்றும் முதலீட்டுச் சம்மேளனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ஹக்கீம் சம்சுதீன் தெரிவித்தார்.

இச்சேவையின் மூலம் இரு நாடுகளுக்குமிடையிலான சுற்றுலாத் துறையை மேலும் ஊக்குவிக்க முடியும் என அவர் குறிப்பிட்டார். உக்ரையினிலிருந்து வர்த்தகம் மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த இரண்டு வேறுபட்ட தூதுக் குழுக்கள் இம்மாதம் இறுதியில் இலங்கை வரவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை உக்ரைனின் சுதந்திர தின வைபவம் எதிர்வரும் 24 ஆம் திகதி கொழும்பில் முதற் தடவையாக கொண்டாடப்படவுள்ளதாக ஹக்கீம் சம்சுதீன் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-4)



கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் தமிழ் தினவிழா அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம், சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட தென்மராட்சி கல்விவலய தமிழ் பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர், க.சின்னத்துரை, யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் க.தர்மராஜா, பாடசாலை அதிபர் திருமதி லலிதமலர் முகுந்தன் ஆகியோர் மாலை அணிவித்து அழைத்து வரப்படுவதையும் படத்தில் காணலாம்.

## இலங்கைக்கும் மாலைதீவுக்குமிடையே பயணிகள் கப்பல் சேவைகள்

இலங்கைக்கும் மாலைதீவிற்குமிடையே பயணிகள் கப்பல் சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாடுகளினதும் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக வர்த்தக கப்பல் பணிப்பாளர் ஷாந்த வீரகோன் தெரிவித்துள்ளார்.

இலங்கை- மாலைதீவு பயணிகள் கப்பல்சேவையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைளை தொடர்ந்தும் முன்னெடுத்துவருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தியாவுக்கு இடையே இந்த பயணிகள் கப்பல் சேவைகள் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தினால் நாட்டின் சுற்றுலாத்துறை முன்னேற்றமடையும் என வர்த்தக கப்பல் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

தற்போது மாலைதீவு செல்லும் சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கும் வருகைதந்து மீண்டும் மாலைதீவு செல்வதை வழமையாக கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

## கிளிநொச்சியில் அதிசக்திவாய்ந்த வெடிபொருட்கள் கண்டுபிடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு பிரதேசத்தில் பொலிஸ் விசேட பிரிவொன்றினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையொன்றின்போது 275 கிலோகிராம் நிறையுடைய அதிசக்தி வாய்ந்த வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரால் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் மேற்படி வெடிபொருட்கள் இரும்புக் குழாய்களில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையிலேயே கண்டு பிடிக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமாக பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

சீ- 4 ரக வெடிபொருட்கள் 25 கிலோகிராம் இரு ஒட்சிசன் சிலிண்டர்களில் மறைக்கப்பட்டிருந்த ரீ என்.ரீ ரக வெடிபொருட்கள் 180 கிலோகிராம் மற்றும் ரீ. என்.ரீ ரக அதிசக்திவாய்ந்த வெடிபொருட்கள் 70 கிலோகிராம் ஆகியவையே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-4)

## துப்பாக்கிச் சூட்டில் கராத்தே வீரர் பலி

கட்டுநாயக்காவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பிரபல கராத்தே மற்றும் டைக்கொண்டோ வீரர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

கராத்தே, டைகொண்டோ தாய்லாந்து பொக்சின் போன்ற துறைகளில் தங்கப் பதக்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்ற கட்டுநாயக்க சுமிந்த என்றழைக்கப்படும் சுமிந்த நதிசான் என்பவரே மேற்படி சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இனந்தெரியாதோர் அவர்மீது ஏழு முறை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-4)

## தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினர்கள் கைதாகும் சாத்தியம்

கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானின் தலைமையிலான தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உறுப்பினர் கைது செய்யப்படகூடிய அபாயம் காணப்படுவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத ஆயுதங்களை தொடர்ச்சியாக பேணி வருவதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்கான கால அவகாசம் முடிவடைந்துள்ளதாக பொலிசார் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தில் ஒரு சில ஆயுதங்கள் மட்டுமே ஒப்படைக்கப்பட்ட காரணத்தினால் பொதுமன்னிப்புக் காலம் மேலும் ஒரு வாரத்திற்கு நீடிக்கப்பட்டது.

அதன்படி இற்றை வரையில் சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைப்பதற்கு அவகாசம் வழங்கப்பட்டது. எனினும் இந்தப் பொது மன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியை சேர்ந்தவர்களும் சட்டவிரோத ஆயுதங்களை பேணிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை 2008 ஆம் ஆண்டிலேயே சட்டவிரோத ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டதாகவும் எந்த விதமான ஆயுதங்களும் தம்வசம் கிடையாது எனவும் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி உறுப்பினர் அறிவித்துள்ளனர்.

எனினும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளும் ஏனைய சில தரப்பினரும் தொடர்ந்தும் சட்டவிரோத ஆயுதங்களைப் பயன்படுத்தி வருவதாகவும் மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன. (ஸ்ரீ-2)


புதிய இடத்தில்! புதிய பொலிவுடன்!

அதிரடி விலைக்கழிவில்....

| SDSCOM - I | SDSCOM - II |
| --- | --- |
| Processor Intel Dual Core 3.2 | Processor Intel i3 3.06 |
| Mother Board - Biostar G41 | Mother Board-Biostar i7 Supt. |
| 2GB DDR-3 Memory - Kingston | 2GB DDR-3 Memory - Kingston |
| HDD 500GB Samsung | HDD 500GB Samsung |
| Casing Tower 250W ATX | Casing Tower 250W ATX |
| DVD Writer | DVD Writer |
| Monitor LCD 16" Viewsonic | Monitor LCD 16" Viewsonic |
| USB Optical Mouse with pad | USB Optical Mouse with pad |
| M/M HI-FI Stero Speaker | M/M HI-FI Stero Speaker |
| Web Camera/ Headphone with mic | USB Keyboard 104 Keys |
| PS/2 Keyboard 107 Keys | Web Camera/Headphone with mic |
| UPS 650VA | UPS 650VA |
| Price :- Rs. 35,400/= | Price :- Rs.48,900/= |
| Original Free : Antivires Kasperksy 2011 | Original Free : Antivires Kasperksy 2011 |

Note ★ 3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்!
★ கையிருப்பில் உள்ளவரை மட்டுமே......

Our Servic

Sales, Repair & maintenance, Software Developments and all type of printing etc.

Authorized Dealer for..

Hp, Dell Items
Biostar Mother Boards
T P Link Products
Viewsonis Products
Havit Products
East UPS

வரவேற்கின்றோம்! மொத்த/சில்லறை விற்பனையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

| | | |
| --- | --- | --- |
| Mother Boards D/C, i3 ,i5, i7 | UPS - 650VA - 3KVA | Pos Printer & Barcode Reader |
| Processors D/C ,i3, i5, i7 | Dongle , Pen Drive | Cash Drawer & Customer display |
| Memory DDR 1,2,3 - kingston | Computer Table & Chair | Fax machines & Scale machines, |
| Hard disk Drive and DVD writer | Routers 1port ,4port and wireless | Cash Register Machines |
| Monitors LCD/LED 16" - 21" | Toners & Cartridges | Laptop - HP / Dell / Susuki |
| Tower casing 250W - 550W | Scanners ,Printer - Laser / Inkjet | Branded Desktop Com - HP / Dell |
| Mouse USB / PS/2 /wireless | All net work Comp Accessories | And many many more.... |
| Keyboard Normal / Multi media | And all Computer Accessories.. | |

தற்போது:- SDS Computer Services
No. 42/1, College Road, Jaffna.
T/P:- 0215100105, 0777874705, Fax :-0212224500

எங்களின் நோக்கம் - உங்களின் தொழில்நுட்ப முன்னேற்றம்

வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழிதேடும்.உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழிதேடும்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அன்னை சோனியாவுக்கு வன்னி உறவுகளின் ஆறுதல் கடிதம்

அன்பின் அன்னை சோனியாவுக்கு வணக்கம். இந்திரா காந்தியை அன்னை என்றுதான் அழைப்போம். அதன்பால் இந்திராவின் மருமகள் என்ற வகையில் உங்களையும் அன்னை என்று உரிமையோடு அழைத்து இக்கடிதத்தை வரைகின்றோம்.

நீங்கள் நோய்வாய்ப்பட்டு சத்திரசிகிச்சை செய்துள்ளதாக அறிந்து அதிர்ந்து போனோம்.

எதிர்பார்க்க முடியாத செய்தி. அன்னை இந்திரா காந்திக்கு நல்ல மருமகள் என்ற பெருமை உங்களுக்கு உண்டு. அதேநேரம் அன்னை இந்திராவின் மரணம், தொடர்ந்து உங்கள் கணவர் ராஜீவ் காந்தியின் இழப்பு என எல்லாமும் உங்கள் வாழ்க்கையில் கடும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தன.

இருந்தும் பாரதத்தின் பண்பாட்டு எல்லைகளுக்குள் நின்று கொண்டு உங்கள் பிள்ளைகளை நேருவின், இந்திரா காந்தியின், ராஜீவ் காந்தியின் வாரிசுகளாக உருவாக்கி அவர்களை அரசியல் களத்திலும் இறக்கிவிட்ட பெருமை உங்களையே சாரும்.

சுருங்கக்கூறின் நேரு குடும்பத்தின் அரசியல் பாரம்பரியம் உடையாமல் காங்கிரஸ் கட்சியையும் கட்டுக்குலையாமல் பாதுகாத்து பாரதத்தின் அரசியல் தலைமையை வழிநடத்தும் பெரும் பொறுப்பும் உங்களுடையதாக இருப்பது உங்கள் ஆளுமைக்கான சான்றுகள்.

உங்களிலும் பார்க்க உங்கள் பிள்ளைகள் ராகுல், பிரியங்கா மீது அளவு கடந்த பாசம் எங்களுக்கு உண்டு.

சகோதரி பிரியங்கா, நளினியை சிறையில் சென்று பார்த்த போது கண்கலங்கினோம்.

ராகுல் காந்தி தமிழகத்தில் வைத்து ஈழத் தமிழர்களின் விடயத்தில் நான் தனிக்கவனம் எடுப்பேன் என்று கூறியபோது அழுதோம்.

ஏன் தெரியுமா? இந்தியாவை நம்பி எல்லாவற்றையும் இழந்த பின்பும் இந்தியாவை நம்புகின்றோமே. அதற்கான அர்த்தம் புரியாமல் இருப்பதன் பொருளாகத்தான் எங்கள் அழுகை இருந்தது.

எங்கள் வாழ்வும் உங்கள் வருத்தமும் ஏதோவொரு வகையில் வேதனைக்குரியவை தான்.

கல் வீட்டில் வாழ்ந்தோம்.அவித்த நெல் பரப்பி, பழுத்த மிளகாய் பரப்பி, பசு மாட்டுப் பண்ணை வைத்து, உழவு இயந்திரங்களில் ஏற்றிய கௌப்பி மூடையில் களைப்பாறி, பாலும் தேனும் பருகி வாழ்ந்த எங்கள் வாழ்வு எல்லாம் அழிந்து இப்போது தறப்பாள் குடிசையில்,ஒரு வேளை உணவுக்கு கையேந்தி நிற்கும் பரிதாபத்தில் வாழ்கின்றோம்.

பரவாயில்லை. எங்கள் இழப்புகளுக்கு இந்தியாவும் மூலகாரணம் என்று சொல்கிறார்கள். அதுபற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது. எங்களைப் பொறுத்தவரை நீங்கள் விரைவில் குணமடைய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

நீங்கள் குணமடைந்து வீடு திரும்பிய பின், முடிந்தால் எங்கள் பிரச்சினை பற்றியும் ஒரு கணம் சிந்தியுங்கள். இறைவன் துணை புரிவான்.

# இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து டில்லியில் கலந்துரையாடல்

(கொழும்பு)

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற் றும் இனப்படுகொலை குறித்து டில்லியில் உள்ள இந்திய சமூகவியல் மையத்தில் கடந்த ஜூலை மாதம் 30 ஆம் திகதி கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 2 ஆம் திகதி பெங்களூரில் ஆரம்பிக்கப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலைக்கு எதிரான மன்றம் சார்பாக ஐதராபாத், மேற்கு வங்காளம், நெல்லூர் ஆகிய இடங்களில் கருத்தரங்குகளும் ஆர்ப்பாட்டங்களும் நடை பெற்றது.இந் நிலையில் இதன் தொடர்ச்சியாக டில்லியில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

சனல் 4 தொலைக்காட்சி வெளியீட்ட தமிழின படுகொலைக்கு ஆதாரமாகவிளங்கும் இலங்கையின்கொலைக்களம் எனும் ஆவணப்பட திரையிடலுடன் இந்நிகழ்வு ஆரம்பமாகியது.

இலங்கை அரசாங்கம் மேற் கொண்ட போரின் உண்மை நிலையையும் பொது மக்கள் மேல் அரசாங்கம் நிகழ்த்திய போர்க்குற்றத்தையும் மனித குலத்திற்கெதிரான குற்றத்தையும் புள்ளி விபரங் களுடன் பேராசிரியர் மணிவண்ணன் இந்நிகழ்வில் எடுத்து விளக்கியுள்ளார்.

இப்போரின் இறுதிக்கட்டத்தில் தென்னிந்திய கடலோர பகுதிகளுக்கு வெள்ளம் போல் வந்து கொண்டிருந்த அகதிகளுடான தனது சந்திப்பு பற்றியும் அவர் எடுத்து கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,இலங்கை அரசாங்கம் கொழும்பில் நடத்திய பயங்கரவாதத்தை அழிப்பதில் இலங்கையின் அனுபவங்கள் என்ற கருத்தரங்கில் இந்தியா உட்பட பல நாடுகள் கலந்து கொண்டன. இதில் உலக நாடுகள் குறிப்பாக தெற்காசியாவில் உள்ள நாடுகள் தீவிரவாதத்தை எதிர்த்து போராடுவதற்கு இலங்கை முன்மாதிரியை செயற்படுத்த முயலவேண்டும் என்று கூறின.

போருக்கு பின்னரான இன்றைய காலகட்டத்தை பற்றி அவர் கூறுகையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வாதிகாரியின் மிக மோசமான ஆட்சி நடைபெற்று வருகின்றது எனவும் இப்பொழுது வடக்கு-கிழக்கு பகுதிகள் முழுவதுமாக இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளது எனவும் கூறினார்.

இந்திய அரசு இலங்கைக்கு 500 கோடி ரூபாய் நிதியை வழங்கியுள்ளது. ஆனால் இந்த பணம் எதற்காக பயன்படுத்தப்பட்டது என்று அரசும், அரசஅதிகாரிகளும் ஆராயவே இல்லை. நம் (வரி) பணம் எவ்வாறு செலவழிக்கப்பட்டது என்பது தெரியவில்லை. இலங்கை அரசாங்கத்தின் 13ஆவது சட்டதிருத்தம் இறந்து போன ஒன்றாகும்.நாங்கள் மீண்டும்13 ஆவது சட்ட திருத்தத்தை செயல்படுத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை என ராஜபக்ஷ கூறியதையும் அவர் நினைவு கூர்ந்தார்.

மேலும் வடக்கு -கிழக்கு பகுதிகளுக்கான வளர்ச்சி பணிகளை ஆராயும் தேசிய வளர்ச்சி குழுவில் ஒரு தமிழர் கூட இல்லை என்றும் போர் மூலம் நடந்த இனப்படுகொலைக்கு பின்னரான இக் காலகட்டத்திலும் இலங்கையில் மெல்ல இனப்படுகொலை தொடர்ந்து தான் வருகின்றது என அவர் சுட்டிக்காட்டினார். (ஸ்ரீ-2)

# வறுமையின் உச்சம்- பட்டினிச் சாவை வன்னி மக்கள் எதிர்கொண்டுள்ளனர்

## கொழும்பு ஊடகம் ஒன்று விபரிப்பு

(கொழும்பு)

வன்னியில் மீளக்குடியேறிய மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த இடைநிறுத்தம் காரணமாக வறுமைக் கோட்டுக்குள் வாழும் மக்கள் போஷாக்கு இன்மையையும், பட்டினிச்சாவையும் எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இது குறித்து இவ்வூடகம் வன்னியில் மீளக்குடியேறிய மக்களிடம் கருத்துக் கேட்டபோது, மீள்குடியேற்றம் எனும் பெயரில் தாம் அநாதரவாக விடப்பட்டுள்ளதாகவும், தமக்கு தொழில் முயற்சிகள் திட்டமிட்டு மறுக்கப்பட்டு வருவதாகவும் இவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ் ஊடகத்திற்கு மகேஸ்வரி என்பவர் கருத்து தெரிவிக்கையில், முதலில் விவசாயம் செய்து பார்த்தேன் சரிவரவில்லை. பிறகு கோழிக்கூடு கட்டி கோழி வளர்த்துப் பார்த்தேன். எல்லோரும் கோழி வளர்க்கத் தொடங்கி விட்டதால் அதுவும் சரிவரவில்லை எனக் கூறியுள்ளார். இவர் காணாமல் போயுள்ள தனது கணவரைத் தேடியவாறு தனது மூன்று பெண் குழந்தைகளுடன் ஒரு சிறிய கொட்டில் வீட்டில் வாழ்ந்து வருகிறார்.

அதேபோன்று கோமதி என்ற பெண்ணின் நிலைமையும் கவலைக்குரியதாக இருப்பதாக இவ் ஊடகம் குறிப்பிட்டுள்ளது.20 வயதேயான அவருக்கு ஒரு வயதில் குழந்தை இருக்கின்றது. கைது செய்யப்பட்ட இவரது கணவர் குறித்த தகவல் எதுவும் இல்லை. தாய்,தந்தை ஷெல் வீச்சில் கொல்லப்பட்டு விட அநாதரவான மூன்று சகோதரிகளும் அவருடனேயே வாழ்கின்றனர். கூலி வேலைக்குச் செல்வதைத் தவிர தனக்கு வேறு எதுவும் தெரிந்திருக்கவில்லை என்கிறார் கோமதி.

அதேபோன்று 18 வயதான துளசியை பாடசாலைக்கு செல்லவில் லையா என இவ்வூடகம் கேட்டபோது இல்லை என தலையாட்டி பதிலளித்துள்ளார். இவரை விட வயது குறைந்த மூன்று தங்கைகள் மற்றும் தம்பி கூட பாடசாலை செல்வதில்லை. இவரின் மூத்த சகோதரர் விடுதலைப்புலிகளுடன் இணைந்து போரில் சாவடைந்துள்ளார். தந்தையார் கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இப்போது தான் வீட்டில் கோழி வளர்க்க ஆரம்பித்துள்ளார் துளசி. ஆனாலும் ஐந்து பேருக்கு ஒருவேளை சாப்பாட்டிற்குத் தான் இத் தொழில் வருவாயைக் கொடுக்கிறது.

இது தவிர ஏற்கெனவே மக்களை விரோதமாக பார்க்கும் சிறிலங்கா படைத்தரப்பினரின் பார்வை நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் இன்னும் மோசமாகியுள்ளது.

கட்டிட வேலைக்கான மணல் அள்ளக்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை கேட்குமாறு படைத்தரப்பினர் நையாண்டி செய்வதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அங்கு அங்குலத்திற்கு அங்குலம் சோதனைச் சாவடிகளும், காவலரண்களும் என மக்கள் அவதானிக்கப்பட்ட வண்ணம் உள்ளனர்.

நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் இம்மக்கள் மீண்டெழவே விரும்புகின்றனர். அவர்களுக்கு அதற்கொரு கால அவகாசம் தேவையாக இருக்கிறது. அவர்களை எவராவது கை தூக்கி விட வேண்டும். மரணங்கள், காணாமல் போதல்கள் மத்தியிலும் மீண்டெழுவதற்கு நம்பிக்கை அவர்களிடம் உறுதியாக தெரிகிறது என இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## பழக்கமே ஒழுக்கம் தரும்



கடவுளிடம் உறுதியாகவும் தூய்மையாகவும் நம்பிக்கையுடையவனாகவும் இருந்தால் வாழ்க்கையில் ஏற்படும் அனைத்துவிதமான இடைஞ்சல்களும் மறைந்து போகும்.

ஒழுக்கம் மீண்டும் மீண்டும் செய்யப்படும் பழக்கத்தால் உருவாகிறது. பழங்கங்களால் தான் ஒழுக்கத்தை மேலும் சிறந்ததாக சீர்படுத்தி அமைக்க முடியும்.

அனைத்து விதமான அறிவும் மனிதனுக்குள் இருப்பதாக வேதாந்தம் கூறுகின்றது.குறிப்பாக சிறுவனிடம் இருக்கின்ற அறிவை விழித்து எழும்படி செய்வதுதான் ஆசிரியனுடைய கடமை.

நம்மிடமுள்ள தெய்வீக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரேவழி. மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி செய்யும் வகையில் அவர்களுக்கு உதவுவது.

நல்லவர்கள் மற்றவர்களின் நன்மைக்காக மட்டும் வாழ்கிறார்கள் . மற்றவர்களின் நன்மைக்காக் அறிஞன் தன்னைத்தானே தியாகம் செய்ய வேண்டும்.உனக்கு நான் நன்மை செய்வதன் மூலமாகத்தான் என்னுடைய நன்மையை நான் பெறமுடியும்.இதைத்தவிர வேறு வழியில்லை என்பதை அனைவரும் உணரவேண்டும்.

நகர சபை, யாழ்ப்பாணம்.



# ஊழலுக்கு எதிராக மக்கள் ஆதரவு அதிகரிப்பு; திருப்புமுனையை ஏற்படுத்துவாரா அன்னா ஹசாரே



(புதுடில்லி)

ஊழலுக்கு எதிராக அன்னா ஹசாரே நடத்தவுள்ள போராட்டத்துக்கு நாட்டு மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி ஹசாரே மேற்கொள்ளவிருக்கும் உண்ணாவிரதப் போராட்டம் திருப்புமுனையை ஏற்படுத்துமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

ஊழலை ஒழிக்க வகை செய்யும் பலமான லோக்பால் சட்ட மசோதாவை பாராளுமன்றில் நிறைவேற்ற வேண்டும் என காந்தியவாதி அன்னா ஹசாரே, அவரது ஆதரவாளர்களும் போராட்டம் நடத்தி வருகின்றனா.

இதனால் லோக்பால் சட்ட மசோதாவை நிறைவேற்ற மத்திய அரசு ஒப்புக் கொண்டது.

எனினும் இது தொடர்பாக ஹசாரே தலைமையிலான குழுவினர் தயார் செய்த வரைவு மசோதாவை மத்திய அரசு புறக்கணித்து விட்டது. மத்திய அரசு சார்பில் தயார் செய்யப்பட்ட வரைவு மசோதா சமீபத்தில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பாக இந்த மசோதா வரம்பிற்குள் வராத வகையில் பிரதமர் பதவி வகிப்போருக்கும் நீதித்துறையில் உயர் பதவி வகிப்போருக்கும் விலக்கு அளிக்கப்பட்டது. மேலும் பாராளுமன்ற எம்.பி.க்களின் நடத்தையும் இந்த மசோதா வரம்பிற்குள் வராது என மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்து விட்டது.

ஹசாரேயின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு அவரது ஆதரவாளர்கள் மட்டுமல்லாமல் நாடு முழுவதும் உள்ள தன்னார்வத் தொண்டு அமைப்புகள் ஊழலுக்கு எதிரான மனப்பான்மை உடையவர்கள் மாணவர்கள் என அனைத்து தரப்பிலும் ஆதரவு பெருகி வருகிறது. (ஸ்ரீ-4)

# பொதுநலவாய ஊழலை சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும்

## பா.ஜ.க வலியுறுத்தல்

(புதுடில்லி)

பொதுநலவாய விளையாட்டு ஊழல் தொடர்பாக டில்லி முதல்மந்திரி ஷீலா தீட்சித்தை சி.பி.ஐ விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று பாரதீய ஜனதா வலியுறுத்தியுள்ளது.

இது பற்றி பாரதீய ஜனதா கட்சியின் தகவல் அறியும் உரிமை பிரிவின் தேசிய அமைப்பாளர் விவேக் சார்க் கூறியதாவது,

தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி பொதுநலவாய விளையாட்டு ஆயத்த ஏற்பாட்டு செலவுகள் குறித்த விபரங்களை கேட்டு பெற்றோம். அதன்அடிப்படையில் சி.பி.ஐ இயக்குநர் ஏ.பி. சிங்கிற்கு புகார் மனுக்கள் அனுப்பி வைத்துள்ளோம். பிரதமர் மன்மோகன் சிங், முன்னாள் தலைமை தணிக்கை அதிகாரி வி.கே சுங்குலு, டில்லி முதலமைச்சர் ஷீலா தீட்சித் ஆகியோருக்கு எதிராக ஊழல் தடுப்பு சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும். என்று கேட்டுக் கொண்டுள்ளோம். எங்கள் புகார் மனுவுடன் ஊழல்கள் தொடர்பான நிறைய ஆதாரங்களையும் இணைத்து இருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

# காங்கிரஸும் பா.ஜ.க.வும் தமிழீழம் அமைவதை விரும்பவில்லை

## தொல். திருமாவளவன் தெரிவிப்பு

காங்கிரஸ், பா.ஜ.க உள்ளிட்ட எந்த கட்சியும் தமிழீழம் அமைவதை விரும்பவில்லை என தொல். திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தமிழீழமே தீர்வு என வலியுறுத்தி சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கில் பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

அவர் மேலும் உரையாற்றுகையில், தமிழீழமே தீர்வு என்று இந்த நேரத்தில் நாம் உரக்க முழங்குவதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. தமிழீழத்தைப் பற்றி யாரும் பேசமாட்டார்.

தமிழீழ கோரிக்கையை யாரும் முன்வைக்க மாட்டார்கள். ஏதேனும் ஒரு தீர்வை சொன்னால் அதை ஒப்புக்கொண்டு அங்கே உள்ளவர்கள் அடிபணிந்து கிடப்பார்கள் என்கிற மமதை சிங்கள இனவெறி ஆட்சியாளர்களிடம் உருவாகியிருக்கிறது. அவர்களின் ஆணவத்திற்கு, மமதைக்கு சம்மட்டி அடி கொடுக்கிற வகையில் இந்த கருத்தரங்கம் நடைபெறுகிறது.


தமிழர்களின் துயரத்திற்கு தமிழீழம் அமைந்தால்தான் தீர்வு கிடைக்கும். பல ஆயிரம் தமிழர்களை இரத்த வெள்ளத்தில் கொன்று குவித்த ராஜபக்ஷ கும்பல் மீது போர்க்குற்றம் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

காங்கிரஸ், பா.ஜ.க என மத்தியில் ஆட்சிக்கு வந்த எந்தக் கட்சியும் தமிழீழம் அமைவதை விரும்பவில்லை என்றார். (ஸ்ரீ-2)

# அன்னா ஹசாரேவின் உண்ணாவிரத போராட்டத்திற்கு இடம் கொடுக்கத்தயார்

## வருண்காந்தி தெரிவிப்பு

(லக்னோ)



வலுவான லோக்பால் சட்டம் கொண்டு வர வலியுறுத்தி அன்னா ஹசாரே மேற்கொள்ள உள்ள காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டத்துக்கு டில்லியில் தான் வசித்து வரும் அரசு வீட்டில் இடம் அளிக்க தயார் என்று பாரதி ஜனதா மக்களவை உறுப்பினர் வருண்காந்தி தெரிவித்துள்ளார்.

பிரதமர், நீதிபதிகள் உள்ளிட்டோர் இடம் பெறும் வகையில் ஊழலுக்கு எதிரான வலுவான லோக்பால் மசோதா கொண்டு வர வேண்டும் என்று சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே உள்ளிட்டோர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதை ஏற்காமல் மத்திய அரசு லோக்பால் மசோதாவை நாடாளுமன்றத்தில் சில தினங்களுக்கு முன் தாக்கல் செய்தது.

எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக ஹசாரே ஏற்கனவே அறிவித்துள்ளார். இதற்கு அனுமதி கொடுக்க மத்திய அரசு தயக்கம் காட்டி வருகிறது. இந்நிலையில் ஹசாரேவின் போராட்டத்துக்கு மத்திய அரசு இடம் அளிக்க மறுத்தால் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அரசு தனக்கு ஒதுக்கியுள்ள வீட்டில் இடம் கொடுக்க தயார் என்று வருண் காந்தி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)




காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி விரைவில் குணமடையவேண்டி நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலையில் தொண்டர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டு வருகின்றனர். கர்நாடக மாநிலம் மங்களூரில் உள்ள கோகர்னேஸ்வரர் கோவிலில் நேற்று முன்தினம் தொண்டர்கள் அங்கப்பிரதட்சணம் செய்வதை படத்தில் காணலாம்.

# கடல் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்ட பா.ஜ.க வினர் கைது

இராமேஸ்வரத்தில் நேற்று இலங்கை கடற்படையைக் கண்டித்து பா.ஜ.க.வினர் கடல் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அவர்களைப் பொலிஸார் கைது செய்து அப்புறப்படுத்தினர். இலங்கை கடற்படை தொடர்ந்தும் தமிழக மீனவர்கள் மீது தாக்கி வருவதைக் கண்டித்தும் அந்தந்த தாக்குதல்களை நிறுத்தக் கோரியும் தமிழக பா.ஜ.க சார்பில் கடல் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி நேற்று இராமேஸ்வரத்தில் கடல் முற்றுகைப் போராட்டத்திற்காக தொண்டர்கள் பெருமளவில் குவிந்தனர். போராட்டத்தில் தேசிய நிர்வாகி முரளிதர்ராவ், மாநிலத் தலைவர் பொன் ராதாகிருஷ்ணன், பொதுச் செயலாளர் எச்.ராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டு படகுகளில் ஏறி கடலுக்குள் செல்ல முயன்றனர். ஆனால் அவர்களைப் பொலிஸார் தடுத்து நிறுத்தி கைது செய்து அங்கிருந்து அப்புறப்படுத்தினர். (ஸ்ரீ-4)

# டெஸ்டில் ஆயிரம் விக்கெட் இலட்சியம் முடியாமல் போனது வருத்தமளிக்கிறது

## மனம் திறந்தார் முரளிதரன்



டெஸ்ட் கிரிக்கெட்டில் 1000 விக்கெட் எடுத்த பின்னர்தான் ஓய்வு பெறவேண்டும் என நினைத்திருந்தேன். ஆனால் காயம் மற்றும் வயதாகிவிட்டது போன்ற உணர்வு காரணமாக ஓய்வு பெற்றதால் என் இலட்சியம் தகர்ந்தது என இலங்கை அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன் சோகமாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சுழல் ஜாம்பவான் முரளிதரன் 133 டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதித்துள்ளார். கடந்த ஆண்டு இந்தியாவுக்கு எதிரான போட்டியுடன் டெஸ்ட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்றார். உலகக் கிண்ணத் தொடருடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்றார். இது தொடர்பில் முரளிதரன் கூறியதாவது,

டெஸ்ட் கிரிக்கெட்டில் 1000 விக்கெட் வீழ்த்திய முதல் வீரராக நான் இருக்கவேண்டும் என்று நினைத்திருந்தேன். இது தான் எனது லட்சியமாகவும் இருந்தது. மனது பெரிய இலக்கை அடைய விரும்பினாலும் என்னுடைய உடல் 800 விக்கெட் போதும் என என்னிடம் சொன்னது. தவிர உடலும் ஒத்துழைக்காததால் இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடருடன் ஓய்வு அறிவித்தேன்.

**நியாயம் இல்லை**

இருப்பினும் 1000 விக்கெட் வீழ்த்துவது சாத்தியமா, அதுவரை தொடர்ந்து விளையாடலாமா என்று கூட மனது நினைத்தது. தற்போது இலங்கை அணி ஆண்டுக்கு 8 டெஸ்ட் போட்டிகளில் தான் பங்கேற்று வருகின்றது. என்னுடைய 1000 விக்கெட் என்ற இலக்கை அடைய வேண்டுமானால் இப்பொதுள்ள போர்மை வைத்துப்பார்க்கும் போது 43 வயது வரை விளையாடிக்கொண்டிருக்க வேண்டும். அதுவரை அணியில் தொடர்ந்து வைத்திருங்கள் என்று தேர்வாளர்களை கேட்பது நியாயமில்லை.

**காதல் காரணம்**

எந்த மனிதனாலும் நீண்டதூர பயணம் செய்ய முடியாது. ஒரு காலகட்டத்தில் போதும் என்ற மனநிலைக்கு தள்ளப்படுவார்கள். அந்த நிலைதான் தற்போது எனக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் தான் ஓய்வினை அறிவித்தேன். இந்த அளவு சாதனை செய்வதற்கு காரணம் கிரிக்கெட் மீது கொண்ட காதல்தான் இவ்வாறு முரளிதரன் கூறினார்.

## டிராவிட் அதிரடி முடிவு

யாரும் எதிர்பார்க்காத வகையில் அணிக்கு தேர்வு செய்யப்பட்ட ஒரு சில மணிநேரங்களில் டிராவிட் திடீரென சர்வதேச ஒருநாள் போட்டி மற்றும் இருபது-20 அரங்கிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,2 ஆண்டுகளாக ஒரு நாள் போட்டிக்கான அணியில் இடம் கிடைக்காத நிலையில் தற்போது வாய்ப்பு கிடைத்துள்ளது. மிகவும் பெருமையாக உள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடருடன் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெறுவேன். இதற்கான அறிவிப்பை தொடர் முடிந்ததும் தெரிவிப்பேன்.

சர்வதேச இருபது-20 போட்டியில் பங்கேற்க மாட்டேன். டெஸ்ட் போட்டியில் மட்டுமே கவனம் செலுத்துவேன். இந்த முடிபை தேர்வுக்குழுவிடமும்,கிரிக்கெட் வாரியத்திடமும் இதுவரை தெரிவிக்க வில்லை என்றார்.

38 வயதான டிராவிட் 1996 இல் ஒருநாள் போட்டியில் அறிமுகமானார். 339 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 12 சதம்,82 அரை சதங்கள் உட்பட 10 ஆயிரத்து 765 ஓட்டங்களைக் குவித்துள்ளார். சராசரி 40 ஆகும்.

அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் டிராவிட் 7 வது இடத்தில் உள்ளார்.1999 மற்றும் 2003 இல் ஒரு நாள் போட்டியில் டிராவிட் புகழ் பெற்ற வீரராக திகழ்ந்தார்.

சர்வதேச இருபது-20 போட்டிகளில் டிராவிட் இதுவரை ஆடியதில்லை .

## பங்களாதேஷ் போராட்டம்

(ஹராரே)

அணித்தலைவர் ரெய்லரின் பொறுப்பான சதத்தின் மூலம் சிம்பாவே அணி 375 ஓட்டங்களை வெற்றி இலக்காக பங்களாதேஷ் அணிக்கு நிர்ணயித்தது.

சிம்பாவேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி ஒரு டெஸ்ட் போட்டி மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் ஒரேயொரு டெஸ்ட் போட்டி கடந்த 4 ம் திகதி ஹராரேயில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணித் தலைவர் சகிப் அல் ஹசன் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 370 ஓட்டங்களை எடுத்தது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 287 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மொகமெட் அஷ்ரபுல் 73 ஓட்டங்களையும் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் 68 ஓட்டங்களையும் நபீஸ் 50 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் விடோரி 4 விக்கெட்டுகளையும் மோபு,பிரைஸ் தலா இரண்டு விக்கெட்டுகளையும் ஜார்விஸ், சிக்கும் புரா தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இந்நிலையில் முதலாவது இன்னிங்சில் 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலை வகித்த சிம்பாவே அணி2 வது இன்னிங்சில் 5 விக்கெட்டுகளை மாத்திரமிழந்து 291 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதன் மூலம் சிம்பாவே அணி375 ஓட்டங்களை வெற்றி இலக்காக பங்களாதேஷ் அணிக்கு நிர்ணயித்தது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ரெய்லர் ஆட்டமிழக்காமல்105 ஓட்டங்களையும் தைபு 59 ஓட்டங்களையும் சிபான்டா 38 ஓட்டங்களையும் மாவோயா 35,ஏர்வின் ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்கு 375 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நேற்றைய 4 ம் நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 112 ஓட்டங்களை எடுத்தது.

இதில் இக்பால்-43,ஹயிஸ்-31 ஓட்டங்களை எடுத்தனர்.இப்போட்டியின் 5- வதும் இறுதி நாளான இன்று பங்களாதேஷ் அணி வெற்றி பெறுவதற்கு 7 விக்கெட்டுக்கள் கைவசம் உள்ள நிலையில் 263 ஓட்டங்கள் எடுத்தாக வேண்டும்.



மெர்குரி ஓபன் டெனிஸ் தொடரின் காலிறுதியில் ரஷ்யாவின் சுவனரேவா ஜேர்மனியின் சபீனாலிஸ்கியை வீழ்த்தினார் பந்தை திருப்பி அனுப்பிய சுவனரேவா.

## இந்திய ஒரு நாள் போட்டி அணியில் இரண்டு வருடங்களின் பின் டிராவிட்

(சென்னை)

இங்கிலாந்து அணிக்கு எதிரான இருபது-20,ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய அணியில் ராகுல் டிராவிட் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். மூத்த சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஒரேஒரு இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இருபது-20 போட்டி ஆகஸ்ட் 31 ஆம் திகதி மான்செஸ்டரில் நடக்கிறது. பின் செப்டம்பர் 3 முதல் 16 ஆம் திகதி வரை, 5 ஒருநாள் போட்டிகள் நடக்கிறது.

இதற்கான 16 பேர் கொண்ட அணியை, ஸ்ரீகாந்த் தலைமையிலான தேர்வுக்குழுவினர் நேற்று முன்தினம் அறிவித்தனர். இதில் கிரிக்கெட் ரசிகர்கள் ஆச்சரியப்படும் விதத்தில், இரண்டு ஆண்டுகளாக ஒருநாள் போட்டிகளில் பங்கேற்காத டிராவிட் (38 வயது) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2007 உலகக்கோப்பை தொடரில் இந்திய அணியின் தலைவராக இருந்தவர் டிராவிட். பின் இந்தியாவில் நடந்த அவுஸ்திரேலியாவிற்கு எதிரான ஒருநாள் தொடரில் மோசமாக செயல்பட்டதையடுத்து அணியிலிருந்து நீக்கப்பட்டார். இதையடுத்து தென்னாபிரிக்காவின் 2009இல் நடந்த சம்பியன்ஸ் தொடரில், அணியின் துடுப்பாட்டத்தை வலுப்படுத்த இரண்டு ஆண்டுகளுக்குப்பின் அணியில் சேர்க்கப்பட்டார்.

**மீண்டும் நீக்கம்**

அந்த தொடருக்குப் பின் மீண்டும் அணியிலிருந்து நீக்கப்பட்ட இவரை, சமீபத்தில் நடந்து முடிந்த உலகக்கிண்ண அணியில் சேர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இளம் வீரர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்நிலையில் சமீபத்திய மேற்கிந்திய தீவுகள் டெஸ்ட், இங்கிலாந்துக்கு எதிரான லோர்ட்ஸ், நோட்டிங்காம் டெஸ்ட்டில்,அடுத்து அடுத்து சதமடித்து அசத்தினார் டிராவிட் . ஆனால் மற்ற இளம் வீரர்கள் துடுப்பாட்டத்தில் சொதப்புகின்றனர்.

இதையடுத்து வேகப்பந்துக்கு ஒத்துழைக்கும் இங்கிலாந்து ஆடுகளங்களில் நிலையில்லாமல் இருக்கும் இந்திய அணியின் துடுப்பாட்டத்தை நிலைப்படுத்த மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்கு பின் இருபது-20 மற்றும் ஒரு நாள் போட்டிக்கான அணியில் வாய்ப்பு தேடி வந்துள்ளது.

**ஹர்பஜன் நீக்கம்**

வயிற்றுப்பிடிப்பு காரணமாக தற்போதய டெஸ்ட் தொடரிலிருந்து சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் நீக்கப்பட்டார். தவிர சமீப காலமாக போர்ம் இல்லாமல் தவித்து வரும் இவர், அடுத்து வரும் இருபது-20,ஒருநாள் தொடருக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

**துணைத் தலைவர்**

இதேபோல், கைவிரலில் காயமடைந்த யுவராஜ் சிங்கிற்கு, எஞ்சியுள்ள இங்கிலாந்



துக்கு எதிரான தொடரிலிருந்து ஓய்வு தரப்பட்டுள்ளது.

அணித்தலைவர் தோனி தலைமையிலான அணியில் சேவாக்கிற்கு துணைத்தலைவர் அந்தஸ்து தரப்பட்டுள்ளது. இவர்களுடன் சச்சின்,விராட்ஹோலி,ரோகித் சர்மா,பார்த்திவ் பட்டேலும் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

**அஷ்வினுக்கு இடம்**


வேகப்பந்து வீச்சாளர் பிரிவில் சகீர்கான், பிரவீன் குமார்,முனாப் பட்டேல் ஆகியோருடன் இம்முறை வினேய் குமார் சேர்க்கப்பட்டுள்ளார்.

சுழற்பந்து வீச்சாளர்களாக தமிழகத்தின் அஷ்வின்,அமித் மிஸ்ரா தேர்வாகினர்.

**அணி விபரம்**

தோனி(அணித்தலைவர்),சேவாக்(துணைத்தலைவர்), காம்பீர், டிராவிட், சச்சின், விராட் ஹோலி,ரெய்னா,ரோகித் சர்மா, வினேய் குமார் மற்றும் பார்த்திவ் பட்டேல்.

# த.தே.கூட்டமைப்பின் நிபந்தனைகளுக்கு அரசு பதில் அளிக்கப் போவதில்லை



## அமைச்சர் பசில் ராஜபக்ஷ அறிவிப்பு

(வவுனியா)

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விதித்துள்ள நிபந்தனைகளுக்கு அரசு ஒரு போதும் பதிலளிக்கப் போவதில்லை. இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார். வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பசில் மேற்கண்டவாறு கூறினார்.**

அவர் மேலும் கூறுகையில், இலங்கையின் இனப்பிரச்சினைக் கான அரசியல் தீர்வு தொடர்பில் மூன்று முக்கிய விவகாரங்கள் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இரு கிழமைகளுக்குள் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நிபந் தனை விதித்துள்ளது.

இந் நிலையில், போர் இடம் பெற்ற காலத்தில் அப்பாவித் தமிழ் மக்களுக்காக எதனையும் செய் யாத கட்சி தற்போது தமிழ் மக்களை பயன்படுத்திஅரசியல்செய்யமுனைப்பு காட்டுகின்றது.

போரின் பின்னரான இலங்கை யின் ஸ்திரத்தன்மையை குழப்பும் முயற்சிகளுக்கு இடமளிக்க மாட் டாது.

அத்துடன் குறுகிய அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செயற் பட்டு வருகின்றது. தமிழ் பேசும் மக் களின் நலனைக் கருத்தில் கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் செயற்பட்டு வருகின்ற போதிலும் தமிழ் அரசியல் பிரதிநிதி கள் பிரிவினவாத கொள்கைகளை முன்னெடுப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ந-5)

## ஜெனிவாவில் இலங்கைக்கு...

அரசாங்கத்துக்கு அமெரிக்கா இராஜ தந்திர தகவல் அனுப்பியிருந்தது. ஆனால் இலங்கை அரசு அதற்கு இன்னமும் எந்தப் பதிலையும் வழங்க வில்லை.

இந்த விவாதம் நடத்தப்பட்டால் இலங்கைப் போரின் இறுதிக்கட்டத் தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை, சனல் 4 வெளியிட்டுள்ள போர்க்குற்ற ஆதாரங்கள் உள்ளிட்ட மனிதகுலத்துக்கு எதிரான குற்றச் செயல்கள் குறித்து உறுப்பு நாடுகள் கலந்துரையாடும் நிலை ஏற்படும் என்று இலங்கை அரசாங்கம் அஞ்சு கிறது.

எனவே ஐ.நா. மனித உரிமை கள் பேரவையின் முந்திய கூட்டத் தொடர்களில் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை வரை பொறுத் திருக்குமாறு இலங்கை அரசின் பிரதிநிதிகள் கூறிவந்தனர்.

இந்த நிலையில் தமது அறிக்கை எதிர்வரும் நவம்பரில் வெளியாக வுள்ளதாக நல்லிணக்க ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரம்பர் 20ஆம் திகதி மனித உரிமைகள் பேரவை யின் கூட்டத் தொடர் ஆரம்பமாகும் வரை இலங்கையின் பதிலுக்காக அமெரிக்கா காத்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்னமும் 6 வாரங்களில் ஆரம்ப மாகும் இந்தக் கூட்டத் தொடர் டிசம் பர் மாதம் 20ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத் தொடரின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர் பில் கலந்துரையாடுவது குறித்து இலங்கை அரசாங்கம் அதற்குள் பதிலளிக்க வேண்டும்.

அவ்வாறு இலங்கை அரசாங் கம் பதிலளிக்காது போனால் அமெ ரிக்கா தலைமையிலான அணி அடுத்தமாதம் ஜெனிவாவில் ஆரம்ப மாகும் ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையின் 18ஆவது கூட் டத்தொடரில் இலங்கைக்கு எதிரான வேறொரு தீர்மானத்தை கொண்டு வரவுள்ளன.

ஜெனிவாவிலும், வாஷிங்டனி லும் உள்ள இலங்கையின் ராஜதந் திரிகள் இலங்கையின் வெளிவிவ கார அமைச்சுக்கு இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அனைத்துலக விசாரணைக்கு அழைப்பு விடுவதாகவும், பொருளா தார தடை மற்றும் பயணத் தடை களை கொண்டுவருவதை உள்ள டக்கியதாகவும் அந்தத் தீர்மானம் அமையலாம் என்றும் இலங்கை ராஜதந்திரிகள் அச்சம் வெளியிட் டுள்ளனர்.

இதேவேளை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் 19ஆவது கூட்டத்தொடரில் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பில் கலந் துரையாட இலங்கை அரசாங்கம் விருப்பம் வெளியிடாது என்று சண்டே ரைம்ஸ் எதிர்வு கூறியுள்ளது. (ந-5)

## தம்பி பிர...

காட்சி கொடுக்கின்றது.

தமிழ் நாட்டில் பெருகிவரும் ஈழத் தமிழர் ஆதரவு நிலையில் இது ஒரு அடுத்த கட்டமாகப்பார்க்கப்படு கிறது. (ந-5)

## பொன்சேகா...

ஆரம்பமாகும் என தெரிவிக்கப் படுகிறது.

சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படும் வரை போராட்டம் நிறுத் தப்படமாட்டாது என ஜனநாயக தேசிய சுதந்திரக் கூட்டமைப்பு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ந-5)

## சோனியா...

தொடர்ச்சியாக வகிப்பீர்கள் என நான் நம்புகிறேன் எனவும் சோனியா காந் திக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட் டுள்ளார். (ந)

## க.பொ.த...

பரீட்சார்த்திகள் அனை வரும் நீலம், கறுப்பு நிற பேனாக்கள் மற்றும் கறுப்புநிற பென்சில்கள் மாத்திரமே பயன்படுத்த அனுமதிக்கப்படுவர்.

மாறாக சிவப்பு, பேப்பிள் பேனாக் கள் மற்றும் குறியூட்டு நிற எழுது கருவிகள் (Highlighters) பயன் படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ள தாகவும் பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள் ளார். (ந)


**உடன் தேவை**

❖ 50 வயதிற்கு மேற்பட்ட விற் பனையாளர் தேவை.

❖ எழுதுநர் இருவர் தேவை (பெண்கள்)

வேலை இடம் : யாழ்நகர்

தொடர்பு : 0775040714

(5754)

நாளை இலங்கையின் முதல்தர பாடசாலை ஆசிரியர்களால் நடாத்தப்படும்

**தரம்- 05 மாணவர்களுக்கான**

**மாபெரும் கல்விக் கருத்தரங்கு -2011**

(பல்லூடக திரையில்- விளக்கங்களும் காட்சிகளும்)

காலம்:- 09.08.2011, 10.08.2011

நேரம்:- மு.ப. 8.30- பி.ப. 2.00 மணிவரை

இடம்:- SCIENCE HALL

(பதிவுகளுக்கு): கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம். 0716424246, 0776688421

ஆசிரியர்கள்:- திரு.Mஅருள் (கொழும்பு இந்துக் கல்லூரி)

திரு.S.Bசுதன்

தரம்-04 மாணவர்களும் பங்குபற்றிப் பயன்பெறலாம்.

(குறிப்பிட்ட தொகை ஆசனங்கள் இருப்பதால் பதிவுகளுக்கு முந்துங்கள்)

(5713)

**அதிபர், ஆசிரியர்கள், வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் வியாபார, விற்பனை பிரதிநிதிகளுக்கான ஆங்கில பயிற்சி**

**20 வாரநாட்கள் English பயிற்சிநெறி**

ஆரம்பம் : 08.08.2011 திங்கள்கிழமை முடிவு : 02.09.2011

பிரிவுகள் : காலை 8-9.30, 9.30-11, 11-12.30, மாலை 3-4.30, 4.30-6

ஏதாவதொரு பிரிவில் பயிற்சிபெறலாம்

பயிற்சிக்கான மொத்த கட்டணம் : ரூபா 3000/- மட்டும்

விஞ்ஞானரீதியான பயிற்சிநெறியின் 20 நாள் வகுப்புக்களில் முழுமையாக ஆங்கிலம் கதைக்க முடியாதவர்களுக்கு பணம் முழுமையாக திருப்பித்தரப்படும்

பதிவுக்கு : 06.08.2011 - 07.08.2011 - 08.08.2011

**ஆங்கிலம் கதைப்பது மிக மிக இலகுவானது**

MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA 077 33 63 456 021 222 9505






**மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்**

**பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்**



கோயிற் பணியுடனெம்
குழந்தைகளின் கல்வியெனும்-ஓர்
தாயின் நினைவாய்-எம்
தலைமுறையிற் தாவடி தன்
சேயாய் உனைக்கருதிச்
செழித்துள்ளம்-அயல்வாழும்
நாளின் விடிவதென்றே
நாம் மகிழ்ந்தோம் வாழிய நீ!

இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவிலடி

காலம்: 14.08.2011 பி.ப. 02மணி (ஞாயிற்றுக்கிழமை)

பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனை தனிப்பட்ட அழைப்பாகக் கருதி சமுகந் தரவும்.

-தேவா மணிவிழா சபை

வாழ்த்துவோர்: த.ஜெயந்தன்

பிள்ளையார் ஸ்ரோர்

K.K.S. வீதி, இணுவில்.

(சி-3913)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.